பிந்திய பதிப்பு



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.

[illegible] Newspaper in Ceylon [illegible] 10

# ஈழநாடு

THE EELA NADU

National Tamil Daily
[illegible] 8 (11 10 66) [illegible] 24[illegible]
[illegible] 25 [illegible] 25 செவ்வாய்க்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு 14

# தமிழரசு எம். பி. க்கள் பிரதமர் சந்திப்பு



## போதனுமொழி, சிங்கள ஆசிரியர் பற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தை



### ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் உறுதி

கொழும்பு, செவ்வாய்

தமிழ் போதனு மொழி, சிங்கள ஆசிரியரை வட, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புதல் இவைபற்றி தமிழரசுக் கட்சி தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மந்திரி திரு. எம். திருச்செல்வம் மற்றும் தமிழரசு எம். பி.க்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. இராசமாணிக்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் பிரதமர் டட்லி சேனநாயக்காவை பிரதமர் வாசஸ்தலத்தில் நேற்றிரவு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இப் பேச்சுவார்த்தையின்போது ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவும் இருந்தார்.

○ பெற்றோர்களின் விருப்பத்துக்கு போதனு மொழியை விடுவது என்ற கல்வி பற்றிய வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கும் அம்சம் பற்றி இப் பேச்சுவார்த்தையின் போது தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் சுட்டிக் காட்டி தாய்மொழியே போதனு மொழியாக இருக்க வேண்டுமென்பது பற்றி வலியுறுத்திய போது, கல்வி அமைச்சின் வெள்ளையறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகள் ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் செனட சபையிலும் விவாதிக்கப்பட்ட பின்னர் மந்திரிசபை இது பற்றி விரிவாக ஆராய்ந்து முடிவு செய்யும் என பிரதமர் அறிவித்தார்.

○ கோரிக்கையின் பேரில் சிங்கள ஆசிரியர்களை முஸ்லிம் பாடசாலைகளுக்கு அனுப்பும்பட்சத்தில் அங்கு கல்வி பயின்றுவரும் தமிழ்ப் பிள்ளைகள் இப் பாடசாலைகளிலிருந்து வேறு பாடசாலைகளில் இடம்மாறி சேர்ந்து கல்வி பயில்வதற்கு ஏற்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்ற தமிழரசுக்கட்சி எம். பி.க்களின் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

நேற்று இரவு 9 30 மணிக்கு ஆரம்பமான பேச்சுவார்த்தை நள்ளிரவு 12 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது

## தகுதியான ஆசிரியர் ஆங்கிலம் போதிப்பர்

### தரத்தை உயர்த்த கல்வி இலாகா ஏற்பாடு

கொழும்பு, செவ்

ஆங்கிலத்தில கல்வி பயின்று தகுதிபெற்ற ஆசிரியர்களையே பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வி போதனைக்கு பயன்படுத்தவேண்டும் என்று கல்வி இலாகா முடிவு செய்திருக்கின்றது.

அத்துடன் வாரத்தில் குறைந்தது 9 வகுப்புக்களாவது ஆங்கிலத்தில் நடைபெறவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டில் சுமார் 1000 பாடசாலைகளில் மாணவ ஆசிரியர்களே ஆங்கிலம் கற்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆங்கிலத்தில் தகுதியற்றவர்களாய் இருப்பதாகவும் அதனுல் ஆங்கிலக் கல்வியின் தரம் பாடசாலைகளில் குறைந்துவிட்டதாகவும் கருதப்படுகின்றது. இதன் காரணமாகவே ஆங்கிலத்தை ஆங்கிலத்தில் தகுதிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டே படிப்பிக்க வேண்டும் என்ற முடிவை கல்வி அமைச்சு செய்திருக்கின்றது.

### கல்வி மா அதிகாரி நடவடிக்கை

உயர்நிலைப் பாடசாலைகளின் ஆங்கிலத் தரத்தை உயர்த்துவதற்கு கல்விப் பகுதியின் மா அதிகாரி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நாட்டின் உயர்நிலைப் பள்ளிகளின் ஆங்கிலத்தரம் மிகவும்மோசமான நிலையை அடைந்து விட்டதாகத் தெரிவித்தஅவர், பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கட்டளையொன்றைப் பிறப்பித்துள்ளார்.

"ஆங்கிலத்தின் தரம் மிகவும் குறைந்துவிட்டது. அதனை உயர்த்துவதற்கு உடன்நடவடிக்கை எடுக்கவும்" இவ்வாறு கல்விப் பகுதியின் பதில்மா அதிகாரி திரு. ஹெட்டியாராச்சி தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பிவைத்துள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானின் அன்பளிப்பு

கொழும்பு, திங்கள்

நடமாடும் குளிர்சாதன வண்டியொன்றை இலங்கை கடல்தொழில் கூட்டுஸ்தாபனத்துக்கு ஜப்பான் அன்பளிப்பாக வழங்கவிருக்கிறது. இந்த குளிர்சாதன வண்டி ரூபா 52, ஆயிரம் பெறுமதியானது.

## பால் மா தொழிற்சாலை

### நுவரேலியாவில் உருவாகும்

கொழும்பு, திங்கள்

பால்மா தயாரிக்கும் தொழிற்சாலை நுவரேலியாவிலுள்ள அம்பவல எனுமிடத்தில் கட்டப்படவிருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் விவசாய இலாகா கவனித்துவருகிறது.

## மோட்டார்வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதிசெய்ய அனுமதி

கொழும்பு. திங்கள்

மோட்டார்வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்கு இவ்வருடபிற்பகுதியில் ரூ75 லட்சம் வரையான அந்நிய செலவாணியை அனுமதிக்க [illegible] முடிவு செய்துள்ளது.

## பஸ்தரிப்பு நிலையங்கள் 20 நிறுவப்படும்

### யாழ். பஸ் பிரயாணிகளுக்கு வசதி

யாழ்ப்பாணம், செவ்

பிரயாணிகள் மழை வெயிலினுல் அவதிப்படாமல் வசதியாகத் தங்கியிருந்து பஸ் ஏறுவதற்காக 20 பஸ் தரிப்பு நிலயங்களை யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கட்டுவதற்கு இ போ. ச ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகின்றது இந்தத் தரிப்பு நிலையங்கள் மாநகர சபை ஆணையாளர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் அமைக்கப்படுமென்று தெரிகிறது.

இந்தத் தரிப்புநிலையங்கள் அமைப்பதற்காகச் சுமார் ரூபா 10 ஆயிரம்வரை செலவாகுமென்றும், முதலில் 20 நிலையங்களும் பின்னர் அவசியத்தைப் பொறுத்து மேற்கொண்டு நிலையங்கள் அமைப்பதுபற்றி முடிவு செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## வருமான வரி இலாகாவுக்கு 'டிமிக்கி' காட்டியவர்கள்

### கோர்ட்டுக்கு அழைக்கப்படுவர்

கொழும்பு, திங்கள்

வருமானவரிஇலாகாவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளில் தமது உண்மையான வருமானங்களிலிருந்து குறைவாக வெளியிட்டுள்ள நபர்கள் மீது வழக்குத் தொடர இலாகாதீர்மானித்துள்ளது.

இவ்வகையில் இலாகாவுக்குச் சேரவேண்டிய தொகை 10 கோடி ரூபாய்க்கு மேலிருக்கிறதாக இலாகா தெரிவித்துள்ளது.

பிரபல தொழில் வர்த்தக நபர்கள் இவ்விதம் தமது வருமானத்தை வெளிபிடாது இருப்பதாகவும், அவர்கள் நீதிமன்றத்தின் முன் ஆஜராக்கப்படுவார்களெனவும் தெரிகிறது.

ஒருமுறை தமது வருமானக் கணக்கை வெளியிட்டவர்களுக்கு அவர்களுடைய வருமானத்தில் மூன்றில் இரண்டுபகுதிமீதே வரிவிதிக்கப்படும் என்ற அறிக்கையை இலாகாவிடமிருந்து பெற்றவர்கள் சிலரும் சரியான கணக்கை வெளியிடாதிருக்கின்றனர் என இலாகா அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**கணக்காளர்**

சுன்னாகத்தில் உள்ள பிரபல ஸ்தாபனமொன்றிற்கு தகுதிவாய்ந்த கணக்காளர் தேவை. பிணைப்பணம்கட்ட வேண்டும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். K. M. Nadarasa, No 233, K. K. S. Rd., CHUNNAKAM. 1125

## விற்பனைக்கு

**'பப்பி'கள்**

இரண்டு மாத 4 பெண் 'பப்பி'கள் விற்பனைக்கு உண்டு. அல்சேஷன்-லெபுருடா கலப்பு இனம். 25, செம்மணி ரோட், நல்லூர். 1126

**புத்தகங்கள்**

5ம் வகுப்பு வினாப்பத்திரங்கள், பரீட்சையில் வருவனபோன்ற மாதிரி வினாப் பத்திரங்கள் மீட்டற் பயிற்சிக்கும் உபயோகமானவை. கணிதம். பாஷை, சூழல், ஆங்கிலம். ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனிப் புத்தகங்களாக விற்பனையாகின்றன ஒவ்வொன்றும் 70 சதம். எழுதியவர்: புதுமைலோலன். விற்பனை: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 1127

## வைத்தியம்

**தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர் J. P, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

**கார்**

சொந்தப்பாவிப்பில் உள்ள EY 4323 சோமசெற் ஒஸ்ரின் கார் விற்பனைக்கு உண்டு. கொம்பெனியில் புதிதாக இறக்கிய கார் மாதிரி ஒருவித பழுதும் இன்றி இருக்கின்றது. சண்லைட்டையேஸ் அன்றைக் கிளினிஸ், ராணிதியேட்டருக்கு அண்மை, வெரிய கடை, யாழ்ப்பாணம். போன்: 474. 1412

**காணி**

இணுவில் ''மஞ்சத்தடி'' கந்தசுவாமி கோயிலிற்கு அருகாமையில் உள்ள 'கருவேம்பன்' என்னும் இடத்தில், வீடு கட்டுவதற்கேற்ற காணி ஐந்து பரப்பு இரண்டரைக் குழி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு மயில்வாகனம் கந்தசாமி, இணுவில் என்னும் விலாசத்தில் தொடர்புகொள்க. 1128

**காணி**

கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை ரோட்டில் வராலி அம்மன்கோவிலுக்கு அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: P. சபாரெத்தினம், 78, சிவன்கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை. 1411

---

**ரியூ சாலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
**எம். ஜி. ஆர். - சரோஜாதேவி**
நடித்த
**நீதிக்குப்பின் பாசம்**

---


# 3வது வெற்றி வாரம்!

கிங்ஸலி — பிளாஸா — நவா
(வெள்ளவத்தை) (கொட்டாஞ்சேனை)

விஜிதா — விஜயா — ஸ்ரீ கிருஷ்ணா
(ஹட்டன்) (மட்டக்களப்பு) (திருமலை)

மொடோர்ண் — வெலிங்டன்
(பண்டாரவளை) (சாவகச்சேரி)

தீபவளி — கல்யாணி
(நுவரெலியா) (நாவலப்பிட்டி)



**எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா**
**சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா**
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
# பணம் படைத்தவன்

---

## வீதியின் சீர்கேடு

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் தெற்கு 3-ம் வட்டார தூதாவளை வீதி தற்பொழுது சேறும், சகதியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ளது. ''கலாபடிப்பக மன்றம்'' இவ்வீதியின் அவலநிலையைச் சுட்டிக் காட்டி உடுப்பிட்டிக் கிராமசபைத் தலைவருக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளது. இவ்வீதி திருத்துவதற்கெனக் கற்கள் குவிக்கப்பட்டு இரு வருடங்களானபோதும், இதுவரையும் வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை வீதியில் குவிக்கப்பட்டிருந்த கற்களும் குவியல்களில் இருந்து மாயமாக மறையத் தொடங்கியுள்ளன. தூதாவளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கடைக்குப் பொருட்கள் ஏற்றிவரும் லொறியும் இவ்வீதியால் வரமுடியாமலுள்ளதாகவும் இதனால் சங்கக் கடைக்குக் கஷ்டமேற்பட்டுள்ளதாகவும் மனேஜர் திரு. கே. சிவப்பிரகாசம் நமது நிருபரிடம் தெரிவித்தார். வட்டார அங்கத்தவர் திரு இ. தணிகாசலத்திற்கும் முறையிடப்பட்டுள்ளது.

## வாகீசர் சனசமூக நிலையம்

அல்லைப்பிட்டி, திங்கள்

அல்லைப்பிட்டி வாகீசர் சனசமூகநிலையத்தின் பத்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம், திரு. க. கைலாசபிள்ளை ஜே. பி. தலைமையின் கீழ் நடைபெற்றது.

தலைவர் தன் முன்னுரையில் நாடுமுன்னேற ஒற்றுமை மிக மிக அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

புதிய காரியசபை தெரிவின் போது முந்திய காரியசபையினரையே மக்கள் மீண்டும் தெரிவுசெய்தனர். தலைவராக திரு. ச. செல்லத்துரையும், உப - தலைவராக திரு. க. நல்லையாவும், செயலாளராக திரு. க. செல்வநாயகமும், உப-செயலாளராக திரு. செ. இல்லையம்பலமும், பொருளாளராக திரு. க. இராசரத்தினமும் காரியசபை அங்கத்தினர்களாக பண்டிதர் க. வ. ஆறுமுகம், திரு. மு. அருணாசலம், திரு. வ. செல்லப்பெருமான், திரு. ந. சோதிவேல் ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# குளம்போல் காட்சிதரும் பஸ் நிலையம்

உடுப்பிட்டி, திங்.

நெல்லியடி பஸ் நிலையம் சுமார் 20 அடி நீளமும், ஒன்றரை அடி ஆழமும் கொண்ட சிறு குளம் போல் காட்சியளிக்கின்றது. கடந்த ஒருவாரகாலமாகத்தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் நிரம்பிய வெள்ளம், பஸ்நிலையத்தில் கடந்த சில வருடங்களாகக்காணப்படும் ஆழமான பள்ளங்களில் நிரம்பி வழிகின்றது. அதுமட்டுமல்ல இந்த இடத்திலேயே பஸ்களும்நிற்பாட்டப்படுகின்றன. பிரயாணிகள் அவ்வெள்ளத்தில் இறங்கி ஆடைகளை நனைத்தபடியே பஸ்களில் ஏறுகிறார்கள். இப் பள்ளங்களை மூடி தரையைச் சமப்படுத்தும்படி இது வரைகாலமும் சம்பந்த பட்டவர்களுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று தெரிய வருகின்றது.

அண்மையில் இப்பள்ளங்களை மூடுவதற்குச்சிரமதான இயக்க மூலம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நின்றுவிட்டதாகவும் தெரிய வருகிறது, இதுசம்பந்தமாக நெல்லியடிப் பொது மக்கள் நெல்லியடிப் பட்டின சபையின் விசேஷ ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகருக்கு புகார் செய்துள்ளதாக அறியப்படுகின்றது.

---

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**MYSTERIOUS Dr. SATAN**
(serial)

---

**சென்ரல் தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
**சிவாஜி — சாவித்திரி**
நடித்த
**திருவிளையாடல்**

---

**REGAL — JAFFNA**
**NOW SHOWING**
David Farrar
Noelle Adam
in
BEAT GIRL

---

# விளம்பரம்

## காங்கேசன்துறை பட்டினசபை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

1967-ம் வருடத்தில் பின்வரும் பொருட்களை அளிப்பதற்கு இரண்டு பிரதிகள் கொண்ட 'ஸீல்' போடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கீழ் கையொப்பமிடப்பட்டவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | கேள்விப் பத்திரப்பணம். (திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது) | கேள்விப்பத்திர டிபொஸிட்பணம் (திருப்பிக்கொடுக்கப்படும்) |
|---|---|---|
| 1. மின்சாரப் பொருட்களும் கருவிகளும் | ரூ. 2/- | ரூ. 10/- |
| 2. பொது சாமான்கள் | ரூ. 2/- | ரூ. 10/- |
| 3. காகிதம், பேனா முதலியன | ரூ. 2/- | ரூ. 10/- |

கேள்விப்பத்திரங்கள் 26-10-66 பகல் 12 மணிக்கு கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 9-11-66 பகல் 12 மணி.

காரியாலய நேரங்களில் வேறு தகவல்கள் காரியதரிசியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பட்டினசபைக் காரியாலயம்,
காங்கேசன்துறை,
7-10-1966.

ஏ. வி. சதாசிவம்
தலைவர்
காங்கேசன்துறைப் பட்டினசபை
1325

## யாழ். இந்து மகளிர் கல்லூரி
### பிரவேசம் 1967

கீழ்க்காணும் வகுப்புக்களில் மாத்திரம் இடம் உண்டு.

6, 7, 8 வகுப்புக்கள்:

க. பொ. த. ப. (சாதாரணம்) ஆரம்ப வகுப்பு, கலை, விஞ்ஞானம்.

க. பொ. த. ப. (உயர்தரம்) ஆரம்ப வகுப்பு, கலை விஞ்ஞானம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 18-10-66.

பரீட்சை நடைபெறும் திகதி விண்ணப்பித்தவர்களுக்கு அறிவிக்கப்படும்,

5ம் வகுப்பில் இடம் இல்லை.

4ம் வகுப்பிற்குப் போதிய அளவு விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்தமையால் 10-10-66 உடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்வது நிறுத்தப்பட்டுள்ளது.

அதிபர்
1321

## கேள்வி விளம்பரம்

பூவரசங்குளம் - மருதாடு ரோட் வேலைக்குக் கேள்வி விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து 15-10-66 காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் 14-10-66க்கு முன் அலுவலக நேரத்தில் கேள்வி வைப்புப் பணம் 50 ரூபாவும், விண்ணப்பப் பத்திரப் பணம் 10 ரூபாவும் கிழக்கு மூலை வடக்கு (ஓமந்தை)க் கிராமசபை அலுவலகத்தில் கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எம்மிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை எமது கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

அ. வீரசத்தி ஜே. பி.
கி. ச. அக்கிராசனர்.
கிராமசபை அலுவலகம்,
கிழக்குமூலை வடக்கு.
ஓமந்தை. 8-10-66.
1322

# பூட்டோடு பரதேசம் போன சைக்கிள்!

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் சின்னக்கடை மீன்சந்தைக்கு நேற்று முன்தினம் காலையில் புத்தம் புதிய சைக்கிளில் மீன் வாங்கச் சென்றார், சுண்டிக்குளியைச் சேர்ந்த திரு. த. சுப்பிரமணியம் என்பவர். அவர் தனது சைக்கிளை வீதிக்கரையில் அவதானமாகப் பூட்டி விட்டு மீன் வாங்கச் சென்றார். 5 நிமிடத்தில் திரும்பி வந்து பார்த்தபோது அவருடைய புதிய சைக்கிள் அங்கு காணப்படவில்லை. அங்கும் இங்கும் ஓடினார். ''ஐயகோ! எனது புதிய சைக்கிளைக்காணவில்லையே'' என்று தலையில் அடித்துக்கொண்டார். சுப்பிரமணியம் தனது சைக்கிள் திறப்பைக் கையிலேயே வைத்திருந்தார். பூட்டப்பட்ட நிலையிலேயே சைக்கிள் களவாடப் பட்டது இதுசம்பந்தமாக சுப்பிரமணியம் பொலிசில் புகார் செய்துள்ளார்.

## தண்ணீர் விநியோகம் அதிகாரி நேரில் விஜயம்

சுழிபுரம், திங்கள்

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் பெண்ணாலையில் தண்ணீர்விநியோகம் நடைபெறும் இடங்களைப் பார்வையிட்டு மேலும் வேண்டிய விபரங்களை அறிந்துகொண்டு சென்றுள்ளார்.

சுழிபுரம் கிராமசபை உத்தியோகஸ்தர்களுடன் தொடர்புகொண்டு தண்ணீர் விநியோகம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் சேகரித்துக் கொண்டு அவர் சென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத அழகிப் போட்டி

## பம்பாயில 21-ல் நடைபெறும்

பம்பாய், அக். 10

பாரதத்தின் அழகியைத் தெரிவு செய்வதற்கு இம்மாதம் 21-ம் தேதி பம்பாயில் அகில பாரத அழகிப் போட்டி யொன்று நடக்கவிருக்கிறது.

இதில் சென்னை, பெங்களூர், டெல்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அழகிகளும் கலந்து கொள்வார்கள்.

இந்தப்போட்டியில் பரிசு பெறும் பெண்ணுக்கு 'பாரத அழகி' என்ற பட்டம்வழங்கப்படும். பாரத அழகியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பெண் உலக அழகிப் போட்டியில் கலந்து கொள்வார்.

# ஜோன்சன்-குரோமிக்கோ சந்திப்பு

## வியட்னும் பிரச்னையில் ஒருதீர்வு ஏற்படுமா?

வாஷிங்டன் அக். 10

வியட்னும் பிரச்னையில் ஒரு தீர்வு காண்பதற்கான யோசனைகள் குறித்து அமெரிக்க அதிபர் திரு. ஜான்ஸனும், சோவியத் யூனியன் வெளியுறவு மந்திரி திரு. ஆண்டீரி குரோமிக்கோவும் இன்று வாஷிங்டனில் சந்திக்கின்றனர்.

இவர்களது பேச்சுவார்த்தையில் வியட்னும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இரு நாடுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகப் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

சீனுவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் இப்போது ஏற்பட்டிருக்கும்வேற்றுமை வளர்ந்து கொண்டிருப்பதால், ரஷ்யா - அமெரிக்கா தெரிவிக்கும் யோசனைகளை ஏற்றுக்கொள்ளுமென்றும், ஜோன்ஸன் - குரோமிக்கோ பேச்சுவார்த்தையின் போது சில சமயங்களில் ஒரு தீர்க்கமான முடிவு ஏற்படாவிட்டாலும், விரைவில் வியட்னும் பிரச்னையில் ஒரு தீர்வு ஏற்படுவதற்கு வழிவகுக்குமென்றும் கருத்தப்படுகிறது.

## 5,000 வெளிநாட்டு மாணவர்கள்

பெர்லின், அக். 10

114 நாடுகளைச் சேர்ந்த சுமார் 5000 வெளிநாட்டு மாணவர்கள் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் கல்வி பயிலுகின்றனர். அவர்களில் 800 பேர் இந்த ஆண்டில் வந்து சேர்ந்தவர்களாவர். 1970-ல் சுமார் 10,000 வெளிநாட்டு மாணவர்கள் இங்கு கல்விபயிலுவர் என்று மதிப்பிடப்படுகிறது. இந்த ஆண்டில் இங்குள்ள பல்கலைக் கழகங்களில் 25,000 மாணவர்களும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் 11,000 மாணவர்களும் புதிதாகச் சேர்ந்துள்ளனர்.

## வியட்னுமுக்கு 1,000 சைக்கிள்கள்

பெர்லின், அக். 10

வியட்னும் மக்களுக்கு உதவியாக விரைவில் 1000 சைக்கிள்கள் இங்கிருந்து அனுப்பிவைக்கப்படும்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் எழுத்தாளர் சங்கம் 'வியட்னுமுக்கு 1000 சைக்கிள் அனுப்பும் நிதி'யைத் தொடங்கி, ஒரு சில நாட்களில் மக்கள் போதுமான பணத்தை வழங்கிவிட்டனர். வியட்நாமுக்கு உதவுவதற்காக ஜெர்மன் மக்கள் இதுவரை 10 லட்சம் மவுன் வழங்கியிருப்பதாக 'வியட்னும் குழு'க் காரியதரிசி அறிவித்தார்; இதுதவிர வியட்னுமுக்கு உதவத் தொழிற்சங்கங்களும், பத்திரிகையாளர் சங்கமும் 10 லட்சக் கணக்கில் மார்க் நிதி வசூலித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

# பாரத முஸ்லிம்கள் பூரண உரிமையை அனுபவிக்கின்றனர்

## பாங்கோக்கில் டாக்டர் ஹுசைன்

பாங்கொக், அக். 10

பாரதத்தில் வாழும் ஆறு கோடி முஸ்லிம் மக்கள் பூரணமாக மாதசுதந்திரத்தை அனுபவிக்கின்றனர் என்று இந்தியஉப ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசைன் இங்கு தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துக்கு விஜயம் செய்துள்ள டாக்டர் ஹுசைன் பாங்கொக்கில் தமக்கு அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பொன்றில் உரைநிகழ்த்தினார்.

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், சரி எந்த இனத்தவர்களாயிருந்தாலும் சரி அவர்கள் இந்தியாவில் பாகுபாடின்றி ஓரின மக்களாக சகல உரிமைகளும்பெற்று வாழ்வு நடாத்துகிருர்கள் என டாக்டர் ஹுசைன் சொன்னார்.

தாய்லாந்தின் சிறப்புமிக்க இடங்களைச் சென்று பார்வையிட்டார், உபஜனாதிபதி 200 ஆண்டுகளுக்கு முன் கட்டி எழுப்பபட்ட புத்த ஆலயத்தை பார்வையிட்ட போது உப ஜனாதிபதி பிரமித்துக் கொண்டார்.

தாய்லாந்தின் தினசரிப் பத்திரிகைகளெல்லாம் உப ஜனாதிபதி ஹுசையின் படத்தை முன் பக்கத்தில் பிரசுரித்து செய்திகளும் வெளியிட்டிருந்தன.

உப ஜனாதிபதிக்கு இங்கு பல இடங்களிலும் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

## கொல்லப்பட்டார்!

பாங்கொக் அக். 10

என்ஜின் டிறைவர் கொல்லப்பட்டார்! செரன்சோ என்ற இடத்தில் சாமான்கள் ரயிலுக்கும், லாறியொன்றுக்குமிடையே ஏற்பட்ட பயங்கர மோதலின் போதே இந்தப் பரிதாபகரமான சம்பவம் நடந்தது. (பி. டி. ஸி.)

## தெ. மே. ஆபிரிக்கப் பிரச்னை

நியுயோர்க், அக். 10

தற்போது நடைபெறும் ஐ. நா. பொதுச்சபைக்கூட்டத்தில் தென்மேற்கு ஆபிரிக்கப் பிரச்னைக்கு முதலிடம் அளித்ததை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வரவேற்கிறது. வெளிவிவகார மந்திரி திரு. ஒட்டோ வின்சரிடமிருந்து ஐ. நா பொதுச்சபைத்தலைவருக்குக் கிடைத்துள்ள ஒரு தந்தியில் இத்தகவல் தரப்பட்டுள்ளது.

தென்மேற்கு ஆபிரிக்கா பற்றி சர்வதேச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தமது நாடு கண்டிப்பதாகவும், தென்மேற்கு ஆபிரிக்காவுக்குச் சுதந்திரம் வழங்குவதே பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஒரேவழியென்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## 'தோதல் நிதிக்கு சினிமாப்படம்'

சேலம், அக் 10

தேர்தல் நிதிக்காக திராவிட முன்னேற்றக் கழகம் சினிமாப் படம் தயாரிக்கிறது. இப்படத்தை வெளியிட அனுமதி மறுக்கப்பட்டால் அதை எதிர்த்து போராட்டம் நடக்கும்.'

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி மேற்கண்ட தகவலை வெளியிட்டார். இது பற்றி அவர் மேலும் கூறியதாவது: இப்படத்தின் பெயர் 'உன்னைத்தான் தம்பி' இதில் கழக நடிகர்களும் தோழர்களும் நடிப்பார்கள் இப்படம் அடுத்த மாதம் திரையிடப்படும்.

# 'மந்திரியாக வருவது கஷ்டமான காரியமல்ல'

## சென்னையில் அண்ணாதுரை பேச்சு

சென்னை, அக். 10

"நான் அரசியலுக்கு வராமல் இருந்தால் இப்பொழுது ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டிருப்பேன். ஆசிரியராக இருந்தபொழுது நிம்மதியாக இருந்தேன். அரசியலுக்கு வந்தபிறகுதான் எதிர்ப்புகளும், இன்னல்களும் வந்தன'

சென்னை வாடியா நகரில் கட்டப்பட்ட உயர்நிலை பள்ளிக்கூடத்தைத் திறந்துவைத்த தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: திறமையுள்ளவர்கள் தரமுள்ளவர்கள் இன்று ஆசிரியர் வேலைக்கு வருவதில்லை காரணம் ஆசிரியர்களுக்கு சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படவில்லை. ஆசிரியர்கள் நிம்மதியாக வாழ அவர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்கப்படவில்லை.

நான் கல்லூரி படிப்பை முடித்ததும் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள பள்ளியில் 6 மாதகாலம் ஆசிரியராகத்தான் வேலைபார்த்தேன் தமிழ்நாட்டில் படித்தவர்களுக்கு உலகமெங்கும் வேலைகிடைக்கிறது ஆகவே மாணவர்கள் டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் வரவேண்டும். மந்திரியாக வரவேண்டும் என நான் வாழ்த்தவில்லை ஏனெனில் மந்திரியாக வருவது கஷ்டமில்லை.

## பம்பாயில் மோதல்!

பம்பாய், அக் 10

பம்பாயில் பிவண்டி பகுதியில் உள்ள சுமார் 2000 விசைத்தறி தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நடத்திய ஒரு ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தியபோது, கலவரம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் கல் வீச்சு நடத்தினர்கள். அதைத் தொடர்ந்து பொலிஸ் தடியடி நடத்தது. இதில் 126 பேர் காயமடைந்தனர். 30 பொலிசாரும் காயமடைந்தனர்.

## முதலமைச்சரின் பிறந்ததின விழா

சென்னை, அக். 10

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் 70-வது பிறந்ததின விழா நேற்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

## வாயு மெத்தை வாகனங்கள்

### ஆங்கிலக் கால்வாயில்

லண்டன், அக். 10

இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் மத்தியிலான ஆங்கிலக் கால்வாயைக் கடப்பதற்குத் தற்சமயம் வாயுமெத்தை வாகனங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கோடை காலத்தில் மட்டும் சுமார் 10,000 பேர் வாயுமெத்தை வாகனங்கள் மூலம் ஆங்கிலக்கால்வாயைக் கடந்திருக்கிருர்கள்.

ஹோவர்லொயிட் என்ற கம்பனி இரு பெரிய வாயு மெத்தைவாகனங்களை ஆங்கிலக்கால்வாயில் இயக்கிவருகிறது. கென்ட் கரையோரப் பட்டினமாகிய ராம்ஸ்கேட்டிலிருந்து பிரெஞ்சுக் கரையோரப் பட்டினமாகிய கலாயிஸ்வரை கடல்மார்க்கமாக இந்தப் போக்குவரத்து நடைபெற்றுவருகிறது. 45 நிமிடங்களில் இவ்வாயு மெத்தை வாகனங்கள் ஆங்கிலக் கால்வாயைக் கடந்துவிடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2 லட்சம் பேர் பங்குபற்றினர்

சென்னை, அக். 10

வத்தலக்குண்டில் நடைபெற்ற தி. மு. க. மகாநாட்டில் 50,000 பெண்கள் உட்பட இரண்டு லட்சம் பேர் கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் 10,000 சயிக்கிள்களும்500பஸ்களும், பலயானைகளும், 50,000 மக்களும் சென்றனர்.

## நேரு தங்கை படுக்கையில் இருக்கிருர்

புது டில்லி, அக் 10

நேருவின் தங்கையும் டெல்லி சட்டசபை அங்கத்தவருமான விஜயலட்சுமி உடல் நலம் சரியில்லாமல் படுத்த படுக்கையிலிருக்கிருர்.

ஒரு வார காலம் அவர் ஓய்வு எடுக்க வேண்டுமென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அவருடைய சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

# 'மா - சே - துங்கின் கொள்கையைத் தவிர வேறுகொள்கை கிடையாது'

ஹாங்கொங், அக் 10

கலாச்சாரப் புரட்சிக்காரர் என்று நம்மைச் சொல்லிக்கொள்ளும் செங்காவலர் படையினரின் நடவடிக்கைகள் சீனவில் மோசமடைந்து வருவதாக செய்திகள் கிடைத்துள்ளன.

இங்குள்ள முஸ்லீம்களின் மசூதி, முஸ்லிம் சம்பந்தப்பட்ட விழாக்கள், இஸ்லாமிய கோட்பாடுகள் ஆகியவற்றை அழிக்க, தனியாக ஒரு புரட்சிப்படையை இந்த செங்காவலர் படையினர் அமைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### சர்வமே மா-சே-துங்

'வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாவைத்தவிர வேறுயாரும் அல்ல' என்பது முஸ்லிம்களின் அடிப்படை லட்சியம். இந்தலட்சியத்திற்குப்பதில் 'மா-சே-துங்கின் கொள்கையைத்தவிர வேறு கொள்கைகிடையாது' என்ற லட்சியத்தை முஸ்லிம்கள் [illegible] கொள்ள வேண்டுமென்று செங்காவலர் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

### முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை

சீனவில் உள்ள முஸ்லிம்களுக்கு பத்து அம்சம் கொண்ட அறிக்கை யொன்றை செங்காவலர் படையினர் அனுப்பியுள்ளனர்.

சீர்திருத்த பத்து கட்டளை

○ இஸ்லாமிய ஸ்தாபனங்கள் அனைத்தையும் உடனடியாக நீக்கிவிடவேண்டும். ○ மசூதிகள் அனைத்தையும் மூடிவிடவேண்டும். ○ மதச்சடங்குகளை முன் நின்று நடாத்துபவர் அதை விட்டு சீர்திருத்தப்பள்ளியில் இறங்கவேண்டும். ○ வெள்ளிக்கிழமை வழிபாட்டை நிறுத்திவிடவேண்டும். ○ முஸ்லிம்கள் பிரேதத்தை அடக்கம் செய்யும் முறையை விட்டு தகனம் செய்யவேண்டும். கல்லறை எழுப்பக்கூடாது. ○ திருமண, மரண விழாக்களில் மதச்சடங்கு நடைபெறக் கூடாது ○ எந்தவிதப் பண்டிகைகளும் கொண்டாடக்கூடாது.

○ எங்கும் எதிலும் மதத்தைக்குறிக்கும் சின்னங்கள் காணப்படக்கூடாது. ○ குர்-ஆன் ஓதுவதை நிறுத்தவேண்டும். ○ மூடநம்பிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும். இந்த எச்சரிக்கை முஸ்லிம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

மனச்சாட்சி சம்பந்தப்பட்டவரையில் பெரும்பான்மையினரின் முடிவு என்ற நியதிக்கே இடமில்லை. நீதிமன்றங்களைவிட உயர்வான மன்றம் ஒன்றிருக்கிறது. அதுதான் மனச்சாட்சி என்ற மன்றம்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams: EELANADU Jaffna; Telephone 1029

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 25 உ (11-10-66)


## துணி விநியோகமும் கட்டுப்பாட்டு விலையும்

தமிழ்ப் பிரதேசங்களில் சேலை, வேட்டி, சால்வை முதலியவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவி வருவது பகிரங்க இரகசியமாகும். வர்த்தக மந்திரியின் திட்டப்படி தனியார் துறை துணி வியாபாரிகள் இறக்குமதி செய்யும் உரிமையை இழந்துவிட்டனர். தற்பொழுது துணிகளை இறக்குமதி செய்யவும் விநியோகம் செய்யவும் ஏகபோக உரிமை கூ. மொ. வி. ஸ்தாபனத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. இப்புதிய அமைப்பின் பிரகாரம் கூ. மொ. வி. ஸ்தாபனம் இக்கடமையைப் பெருமளவிற்குச் செயற்படுத்துமென வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் சமீப காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களும் நடந்தேறிய சம்பவங்களும் கூ. வி. ஸ்தாபனத்திலிருந்து நியாயமான விலைக்கு துணிகளை கூட்டுறவு சமாஜங்களும் மற்றும் ஸ்தாபனங்களும் பெறமுடியாதென்ற கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக இருக்கின்றன. தமிழரின் பிரதான தீபாவளி பண்டிகையை எதிர்நோக்கியுள்ள இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கு இத்துணிப் பிரச்னை ஆறுதலளிப்பதாகத் தெரியவில்லை.

கூ. மொ. வி. ஸ்தாபனத்திலிருந்து வெளிவந்துள்ள விலைப்பட்டியலை ஆராயும்போது குறைந்த விலையில் சில நாட்களுக்கு முன்னர் கடைகளில் விற்கப்பட்ட துணிகள் விஷம் போல விலை உயர்ந்துள்ளதாகத் தெரிகிறது. இவற்றையும்விட விலை உயர்ந்த சேலைகள் நியாயமான விலைக்கு இருப்பதாக கூ. மொ. வி. ஸ்தாபனம் அறிவித்துள்ளது. அதிகாரிகளிடம் இது பற்றி விசாரணை செய்தபோது இச்சேலைகள் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட விலைக்குப் பொதுமக்களுக்கு விற்கமுடியாத தரம் குறைந்த சேலைகள் என அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண சமாஜங்கள் இதன் காரணமாகத் தொகையாகத் துணிகளைக் கொள்வனவு செய்யாதிருக்கின்றன. இதனால் துணிவகைகளுக்குத் தீபாவளியின் போது தட்டுப்பாடும் திண்டாட்டமும் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாகப் பொதுமக்களுக்கு எதிர்பாராத பெரும் ஏமாற்றம் காத்திருக்கிறது என்றே கூறவேண்டும். வியாபாரிகளின் தந்திரங்களும் கறுப்புச் சந்தையும், துணி விநியோக முறையில் உள்ள சீர்கேடும் தீபாவளி கொண்டாடவிருக்கும் எளிய மக்களை பெரிதும் பாதிக்கும் என்பதை அரசாங்கமும், அதிகாரிகளும் கருத்திற்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் வர்த்தக மந்திரியும், கூ. மொ. வி. ஸ்தாபனத் தலைவரும் நிலைமையை உணர்ந்து கவனித்துத் தக்க நடவடிக்கைகளைச் செய்யவேண்டியது அவர்களின் தவிர்க்கமுடியாத தலையாய கடமையாகும்.

## இலங்கை பல்கலைக்கழகத்தில் 'ராக்' தடுப்பு

அண்மையில் பதவி பெற்ற பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் ஹெட்டியாராச்சி புதிய பல்கலைக்கழக மாணவர்கள் 'ராக்' முறையில் துன்புறுத்தப்படுவதை வன்மையாகக் கண்டித்து விடுத்த சுற்றுநிருபத்தில் பல்கலைக் கழகத்தின் முதல் தவணைக்காலத்தில் 'ராக்' செய்வதற்கான ஆயத்தங்களையும் முன்னேற்பாடுகளையும் சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொள்ளக் கூடாதென்று எச்சரிக்கை செய்துள்ளார்.

மாணவர்கள் வசிக்கும் விடுதிச்சாலைகளில் அங்குள்ளவர்களைத் தவிர வேறெவரும் அங்கு செல்லக்கூடாதென்றும் புதிய மாணவர்களைத் துன்புறுத்தி இம்சிக்கக்கூடாதென்றும் கட்டளையிட்டுள்ளார்கள். இக்கட்டளையைமீறுபவர்கள்மீது பல்கலைக் கழக நிர்வாகம் கடும் நடவடிக்கையெடுக்குமென்றும் இப்புதிய நிர்வாக முறையை சிரேஷ்ட மாணவர்கள் மனதில் கொண்டு அனுசரித்து பல்கலைக் கழகத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இலங்கையின் உயர்தர கல்விபீடங்களில் இந்த 'ராக்' என்ற பிறநாட்டு அநாகரிகப் பழக்கம் இருந்துவருவது வளர்ந்து வரும் எமது சமூகத்திற்குப் பெரும்சாபக்கேடாக இருந்து வருகின்றது. சிரேஷ்ட மாணவர்களால் கையாளப்பட்டு வரும் முறை, புதிய மாணவர்களைக் கொடும் முறையில் இம்சித்தும் வதைத்தும் அவர்களின் தேகநிலையையும் மன நிலையையும் பாதிக்கக்கூடிய அளவிற்கு இழிவாக இருந்துவருகின்றது.

இலங்கையின் கௌரவத்தையும் மாணவர்களின் நல்லொழுக்கத்தையும் பாதுகாத்து மாணவர்களின் ஒத்துழைப்புடன் இந்த இழிவான வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது மிகவும் புனிதமான பணியாகும்.

## அருணந்தி சிவாசாரியார்
### இன்று அவரது குருபூசை

சீந்தானசாரியருள் அருணந்தி சிவாசாரியரும் ஒருவராவர். இவர் தென்னிந்தியாவிலே நடுநாட்டிலே திருத்துறையூரிலே, ஆதி சைவப் பிராமண குலத்திலே இற்றைக்குச் சுமார் அறுநூறு ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்தார் என்பர். இவர் உரிய காலத்திலே இலக்கிய, இலக்கணங்களையும், வேத சிவாகமங்களையும் ஐயந்திரிபறக் கற்றார் ஆதலால் சகலாகம பண்டிதர் என்று யாவராலும் போற்றிப் புகழப்பட்டார்.

இவரிடம் சீடராயமைந்தவருள், திருப்பெண்ணாடம், அச்சுதகளப்பாளர் என்னும் சைவ வேளாளரும் ஒருவர். இவ்வச்சுதகளப்பாளர் தமது மனத்திலே நெடுநாளாயிருந்து வந்த பிள்ளையில்லாக் குறையை, தமது குருவாகிய அருணந்தி சிவாசாரியரிடம் கூறி வியாகுலமடைந்தார். அப்போது அருணந்தியார் தேவாரத் திருவேட்டிற் கயிறு சாத்திப் பார்த்தபோது.

"பேயடையா பிரிவெய்தும்..." என்னுந் தேவாரங் காணப்பெற்றது. அதன்படியே, அச்சுதகளப்பாளர் தமது மனைவியாருடன் திருவெண்காடடைந்து முக்குளநீரில் ஸ்நானஞ் செய்து ஆங்கே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சுவேதவனப் பெருமானை வணங்கி வந்தார். சில காலஞ்செல்ல சுவேதவனப் பெருமானின் இன்னருளால், ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கு சுவேதவனப் பெருமானை வணங்கிப்பெற்றமையால் சுவேதவனப் பெருமாள் என்றே நாமகரணஞ் செய்தார். இக்குழந்தையானது சிறுவயதிலேயே பக்குவநிலையடைந்து பரஞ்சோதி முனிவரது உபதேசம் பெற்று, மெய்கண்டதேவர் என்னும் பெயரையும்பெற்றது. இம்மெய்கண்ட தேசிகரே சிவஞானபோதம் என்னும் சிறந்த சைவசித்தாந்த நூலை இயற்றியவராவர். இவர் தன்னையடைந்த சீடர்களுக்கு மெய்ஞ்ஞான நூல்களை ஐயந்திரிபறக் கற்பித்து வந்தார்.

அருணந்தி சிவாசாரியார் தமது மாணக்கராகிய அச்சுதகளப்பாளருடைய மகன் ஞான நூல்களை மாணக்கருக்குக் கற்பிக்கும் திறனை அறியவேண்டி அம்மெய்கண்டார் இருக்குமிடம் தேடிச் சென்றார். சென்றபோது ஆணவமலத்தைப் பற்றி, தமது மாணக்கருக்குக் கூறிக்கொண்டிருந்த மெய்கண்டாரைப் பார்த்து அவரின் பரிபக்குவநிலையை உணராதவராகி "ஆணவமலத்தின் சொரூபம்யாது?" என்று கேள்வி கேட்டார். அப்போது தமது சுட்டுவிரலினால் அருணந்திசிவாசாரியாரைச் சுட்டிக்காட்டிய மெய்கண்டதேவர், "ஆணவத்தின் சொரூபம் நீர் நிற்கும் நிலைதான்" என்று உடன் பதில் கொடுத்தார். அப்போதுதான் தமது இறுமாப்பை உணர்ந்த அருணந்தியார் அம்மெய்கண்டாரது அருட்பார்வையைப் பெறுதலினால் அவரது பாதங்களை வீழ்ந்து வணங்கி அவருக்கு மாணக்கருமாயினார்.

மெய்கண்டாரது மாணக்கர் நாற்பத்தொன்பதின்மருள் தலைமாணக்கராய் நிலைநின்ற அருணந்திசிவாசாரியார் அவர்கள் சிவஞானபோதத்தின் வழிநூலாக, சிவஞான சித்தியார் என்னும் ... இருபாவிருபது என்னும் நூலையும் இயற்றி சைவசித்தாந்த உலகுக்கே தந்தருளினார். இச்சிவஞான சித்தியாரின் ஒருபாதி விருத்தத்தின் பொருளையும், அருணந்தி சிவாசாரியாரின் பெருமையையும் பாராட்டி தாயுமானசுவாமிகள்,

> "பாதிவிருத்தத் தாலிப் பார்விருத்தமாகவுண்மை சாதித்தார் பொன்னடியைச் சாருநாளெந்நாளோ"

என்று கூறியுள்ளார்.

அருணந்தி சிவாசாரியார் பல அரிய பெரிய உண்மைப் பொருளையெல்லாம் தம்மை வந்தடைந்த மாணக்கருக்கு உரைத்தருளி, திருத்துறை என்னும் ஊரிலே ஒரு புரட்டாதிமாசத்திலே பூரநட்சத்திரத்திலே முத்தியடைந்தாரென்பர்!

--வை. க. சிற்றம்பலம்
ஆசிரியர்

## திபெத்தில் உடைந்து நொருங்கினர் செங்காவலர்

புதுடில்லி, அக் 10

வயோதிப மதகுரு ஒருவரை எலும்புமுறிய அடித்துவதைத்தார்கள்! அந்தக் கைங்கரியத்தை திபெத்திலுள்ள செங்காவலர் படையினர் செய்திருப்பதாக திபெத்திலிருந்து சமீபத்தில் நேபாளத்திற்குத் தப்பியோடி வந்த திபெத்தியர் ஒருவர் வெளியிட்டுள்ளார். செய்திக்கடிமொன்றில் இதுபற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

திபெத்திலுள்ள பௌத்த ஆலயமொன்றுக்குள் நுழைந்து சிலைகளையும், ஓவியங்களையும், விக்கிரகங்களையும் உடைத்து சுக்குநூறாக நொருக்கினர். இதேபோன்ற பல பலாத்கார சம்பவங்களை செங்காவலர் படையினர் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும்

பம்பாயிலுள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் பத்து வயதுள்ள ஒரு மாணவி. பொல்லாத வாயாடி. அடிக்கடி தன் வாயைத் திறந்து வகுப்பு முழுவதையும் குழப்பியடித்து விடுவாள். அவளை அடக்கவே முடியவில்லை. உபாத்தியாயினி சாம, பேத, தான, தண்டம் முதலிய எல்லா உத்திகளையும் கையாண்டு பார்த்தாள். அந்தப் பெண் ஒன்றுக்கும் மசியவில்லை. கடைசியில் உபத்திரவம் தாங்க முடியாமல் அந்த ஆசிரியப் பெண்மணி ஒரு துண்டு ஒட்டும் நாடாவை (ஸ்டிக்கிங் பிளாஸ்டர்) எடுத்து அந்தச் சிறுமியின் உதடுகளுக்கு மேல் அதை வைத்து ஒட்டி அவளுடைய வாயை அடைத்துவிட்டாள்!

இந்தச் சம்பவம் பம்பாய் பட்டினத்தில் பெரிய பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது உண்டுபண்ணும் தானே!

இந்தச் சிறுமியைப்போல இங்கேயும் எத்தனை மாணவர்களும் மாணவிகளும் இருக்கிறார்கள். நமது பள்ளிக்கூடங்களிலும் இம்மாதிரியான மாணவ சேஷ்டைகள் வர வர அதிகரித்து வருகின்றன. மாணவர்கள் பலர் குடித்துவிட்டு வகுப்புக்கு வருகிறார்களாம். சிலர் வகுப்பிலேயே சிகரெட், பீடி புகைக்கிறார்களாம். ஆசிரியர்கள் இவர்களை அடக்க முயலும்போது அவர்கள் பாடு திண்டாட்டமாய்ப் போய்விடுகிறது. ஆசிரியர் என்ற ஸ்தானத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் மாணவர்கள் அவர்களைக் கண்டவாறு திட்டி அவமானப்படுத்துகிறார்கள். தென்னிலங்கையில் ஓரிடத்தில் மாணவன் ஒருவன் உடைந்த நாற்காலிக்கால் ஒன்றினால் ஆசிரியரை நையப்புடைத்துவிட்டானாம்.

சில நாட்களுக்கு முன்பு பேராதனையிலுள்ள நமது பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் செய்த அட்டகாசம் புரிந்தது அனைவரும் அறிந்ததே.

முற்காலத்து மாணவர்கள் எண்ணும் எழுத்தும் கற்றுத்தந்த ஆசிரியர்களைக் கண்ட மாத்திரத்தே கைகட்டி வாய் புதைத்து மரியாதை செய்வார்கள். தாய் தந்தையருக்கு அடுத்தபடியாக குருவே தெய்வமென மதித்து வந்தார்கள்.

இன்று ஏன் இந்த நிலைமை இப்படி தலைகீழாக மாறியுள்ளது? காலத்தின் கோளாறு அல்லது காலத்தின் நியதியா? இனிமேல் வரும் காலங்களில் இப்படித்தான் நடக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறதா?

இந்தோனேஷியாவில் மாணவர்கள் செய்த ஆர்ப்பாட்டங்களினால் அரசாங்கத்திலேயே மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தோனேஷிய மாணவர்களைப் பின் பற்றித் தானோ என்னவோ இந்தியாவிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் பல இடங்களில் நிகழ்ந்து வருகின்றன.

எதிர்காலத்தில் நாட்டின் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் வரவேண்டிய மாணவர்கள் இப்படிச் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடப்பது நன்மைக்கு அறிகுறியா? தீமைக்கு அறிகுறியா? தத்துவ சாஸ்திர நிபுணர்கள்தான் இதை ஆராயவேண்டும்.

நமது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள மாணவர்கள் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று விசாரித்தபோது ஒரு விசித்திரமான உண்மை வெளிப்பட்டது. நமது மாணவர்களிடத்தில் ஒருவித நிராசை, வெறுப்பு உண்டாகியிருப்பதாகத் தெரிய வருகிறது. "படித்துவிட்டு என்னடா செய்கிறது? பி. ஏ., எம். ஏ. படித்தவனெல்லாம் உத்தியோகத்துக்கு 'லாட்டரி' அடிக்கிறான். பேசாமல் வாடா படம் பார்க்கலாம்" —சராசரி மாணவனின் மனப்போக்கை இது காட்டுகிறது.

ஃ ஃ ஃ

ரொன் கிளார்க் என்ற அவுஸ்திரேலியர் ஒருபெரிய ஓட்ட நிபுணர். நீண்ட தூர ஓட்டங்களில் அவர் இன்றுவரை 14 உலக சாதனைகளை இயற்றியுள்ளார். இவ்வளவு காலமும் அவரோடு போட்டிபோட்டு ஓடியவர்கள் மனிதர்கள். வருகிற 16-ந் திகதி அவருடன் போட்டியிட்டுக்கொண்டு ஓடப்போவது ஒரு குதிரை! 12 மைல் தூரத்துக்கு மனிதனும் குதிரையும் பந்தயம் ஓடப்போகிறார்கள். போட்டி வேகத்தில் அஸ்வத்தின்பின்னங்கால் கிளார்க்கின் மூஞ்சியைப் பதம்பார்த்துவிடுமோ என்று பயந்து அதன்மீது ஒருவர் ஏறிச் சவாரிசெய்துகொண்டு போவாராம்.

-- வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர்போல் நமக்கும் சம்பளம் வேண்டும்!

## மா. நகரசபை மின்சார ஊழியர் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவிலான இலங்கை தேசிய ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் மாநகரசபை மின்சாரப் பிரிவு, தாங்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும், அரசாங்கத்தில் மின்சாரப் பகுதியில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உள்ள சலுகைகளும் உரிமைகளும் அதே தகுதியுடன் கடமையாற்றும் மாநகரசபை மின்சார ஊழியர்களுக்கும் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கோரும் ஒரு மகஜரை யாழ். மாநகர சபைக்கமிஷனரிடம் சமர்ப்பித்துள்ளது.

மேற்படி சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜரில் சில முக்கிய கோரிக்கைகள் பின்வருமாறு:-

மாநகரசபையில் மின்சார ஊழியர்களாகக் கடமையாற்றுவோருக்கு, அதே தகுதியில் அரசாங்கத்தில் கடமையாற்றும் ஊழியருக்கு வழங்கும் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

தற்காலிகமாக வேலை செய்யும் ஊழியர்களுக்கு இப்பொழுது தினமும் வேலை கொடுப்பதில்லை. எனவே குறைந்தது ஒருமாதத்தில் 15 நாளுக்காவது அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டும்.

2 வருடத்துக்கு மேல் சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இப்பொழுது வழங்கப்படும் நாட்சம்பளத்தை மாதச்சம்பளமாக்க வேண்டும்.

வசதிக்குத்தக்கவாறு கண்ட நாட்களில் வழங்கப்படும் சம்பளம் ஒரு குறிப்பிட்ட நாளில் வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

இன்னல் அல்லது இடர்படி எமக்கு வழங்க அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. அப்படியே எமக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9 மாதங்களுக்கு மேல் சேவையில் உள்ளவர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்குள்ளது போல் 21 நாள் தற்காலிகலீவும், 9 நாள் வைத்திய காரண லீவும் எமக்கும் வழங்கப்படவேண்டும்.

---

# மட்டக்களப்பு வாவியினால் கல்விநிலை பாதிப்பு

## பட்டிருப்பு எம். பி.யின் கவலை

களுவாஞ்சிக்குடி, திங்.

மட்டக்களப்பின் கிழக்குக் கரையும் மேற்குக்கரையும் மட்டக்களப்பு வாவியினால் பிரிக்கப்பட்டதன் காரணமாக மேற்குப்பக்கமாக வாழும் மக்களின்கல்வி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று பட்டிருப்பு எம்.பி. திரு. எஸ்.எம். இராசமாணிக்கம் கூறினார்.

களுவாஞ்சிக்குடிவடக்கு புதிய அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை திறப்பு விழா ஊர் தலைவர் திரு. சினித்தம்பி தலைமையில் நடைபெற்றபோது பட்டிருப்புப்பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசினார். மட்டக்களப்பு மாவட்டக்கல்வி அதிபதி திருமதி. நவரத்தினம் கட்டிடத்தை திறந்துவைத்தார்.

வித்தியாதிபதி திருமதி நவரத்தினம்கட்டிடத்தை குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்துப்பேசுகையில் 'பேச்சில்வீணே காலத்தைப் போக்காது காரியத்தில்தான் அதிகம் ஈடுபடவேண்டும். அப்படி ஈடுபட்டால்தான் செய்துமுடிக்க வேண்டிய அநேக காரியங்களை நான் இப்பகுதியில்கடமை புரியும் காலத்தில் செய்து முடிக்க முடியும்என்றார்.'

மட்டக்கடப்பு வட்டார கல்விபரிசோதகர் ஜனாப் மஜீத், பட்டிருப்பு வட்டார பரிசோதகர் திரு. முருகப்பன், திரு. சபாரெத்தினம், ஆசிரியர் திரு. பி. இரத்தினசபாபதி ஆகியோரும் பேசினர் தலைமை ஆசிரியர். ஜெ. கே. குழந்தைவேல் நன்றி புரைகூறினார்.

### விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விழா

பருத்தித்துறை, திங்.

பருத்தித்துறை புலோலி கிழக்கு வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா மேற்படி 'சரஸ்தான்' இல்லத்தில் கழகத் தலைவர் திரு. கு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமதுரையில் இப்படிப்பட்ட கழகங்கள் உருவாக்கப்பட்டால் வாலிபரிடையே ஒழுக்கம், பண்பு, என்பன உருவாகும் என்றும் இக்கழக வளர்ச்சிக்கு மேற்படி கழக அங்கத்தவர்களின் ஊக்கமும் விடா முயற்சியுமே காரணம் என்றும்கூறினார், பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கு. கணபதிப்பிள்ளை, காரியதரிசி: க. அருளானந்தம், தனாதிகாரி: கே. சுப்பிரமணியம், விளையாட்டுப்பகுதித் தலைவர்கள்: மூ. யோகராசா, கு. குலேந்திரநாதன். கடைசியாகத்தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

### வைத்திய அதிகாரி அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு

பருத்தித்துறை, திங்.

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு கோப்பாய் எம். பி. கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 1-1-67 தொடக்கம் வைத்திய அதிகாரியை நியமிக்க அரசாங்கம் இணங்கியுள்ளது.

---

### தலைமை ஆசிரியர் கவலை

திருநெல்வேலி, திங்கள்

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, தலைமை ஆசிரியர் இன்றிக் கடந்த பல மாதங்களாக இயங்கி வருகின்றதாம். ஐந்தாம் வகுப்பு வரையுள்ள இப்பாடசாலையில் ஒரு ஆசிரியை மட்டுமே கடமையாற்றி வருகின்றார். இதுவரை பல தடவைகள் மேலிடத்திற்குப் புகார் செய்தும் பலன் கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

### பொலிசார் வலையில் சிக்கினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

1966-ம் ஆண்டுக்கான சைக்கிள் உத்தரவுச் சீட்டுகள் பெருதவர்கள் மீது பொலிசார் கண் வைத்துள்ளனர். கடந்த இருதினங்களாக யாழ்ப்பாணத்தில் பல வீதிகளிலும் 'லைசென்ஸ்' எடுக்காது டிமிக்கி கொடுத்தவர்கள் பொலிசார் வலையில் சிக்கியுள்ளனர். குற்றப் பணத்துடன், லைசென்ஸுக்குரிய பணத்தையும் வேண்டிய நிலை பலருக்கும் ஏற்பட்டது.

---

# அன்னதானசபை புதிய நிர்வாகிகள்

காரைநகர், செவ்வாய்

காரைநகர் சிவன்கோவில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த நிர்வாக அங்கத்தவர் தெரிவு மடாலய மண்டபத்தில் திரு. சி. இ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி இ செல்லத்துரை, தனாதிகாரி: செ. ஆறுமுகம், இணைச்செயலாளர்கள்: சு இராசசேகரம், வே இராசநாயகம் இன்னும் பதினேழு பேரும் சபை நிர்வாகிகளாகத் தெரிவு பெற்றனர்

---

# படுகாயம் விளைவித்த வழக்கு


மாவிட்டபுரம், திங்கள்

ஒவரை அவர் தம்பியும் மற்றும் மூவரும் கத்தியால் வெட்டியும், கல்லால் தாக்கியும் படுகாயம் விளைவித்ததான வழக்கில் நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளாகக்கண்டு தண்டனை வழங்குவதற்காக வழக்கை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கு அராலி தெற்கைச் சேர்ந்தவர்களான வைத்தியலிங்கம் குமாரசாமி, அம்பலவாணர் சதாசிவம், அம்பலவாணர், குமாரசாமி, அம்பலவாணர், மார்க்கண்டு ஆகிய நால்வரும்இவ்வருடம் பெப்ரவரி மாதம் 1-ம் திகதி அதே ஊரைச்சேர்ந்த வைத்தியலிங்கம் கனகசபாபதி என்பவரை கத்தியால்வெட்டிக்காயம் விளைவித்ததாகவும் பொல் அடித்துகடுங்காயமும் சிறுகாயமும் ஏற்படுத்தியதாகவும் குற்றஞ் சாட்டி சங்கானைப் பொலிசாரால் தொடரப்பட்டுள்ளது. மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்குவழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வைத்தியலிங்கம் கனகசபாபதி சாட்சியமளிக்கையில் நான் வயலுக்குள் வேலை செய்து கொண்டு இருந்தேன். அப்போது நான்கு எதிரிகளும் நான் நின்ற இடத்திற்கு வந்தார்கள். 1-ம் எதிரியின் கையில் கத்தியும், 2-ம் எதிரியின் கையில் இரும்புக்கம்பியும், 3, 4-ம் எதிரிகளின் கையில் பொல்லும் இருந்தன. 1-ம் எதிரி எனது இடது தோள் மூட்டில் வெட்டினார். 2-ம் எதிரி இரும்புக்கம்பியால் தலையில் அடித்தார். கீழே விழுந்துவிட்டேன். எனக்கு சிறிதாக அறிவு மயக்கம் வந்தது. ஆனால் நான்கு எதிரிகளும் என்னைத்தாக்கினார்கள். நான் எழும்பிப்பார்த்தபோது எதிரிகள் றோட்டில் போவதனைக்கண்டேன். அச்சமயம் ஜீப் ஒன்று வரவே எதிரிகள் ஓடிவிட்டார்கள். அந்த ஜீப்பில் வந்தபொலிசார் முதலில் என்னைப் பொலிஸ் நிலையத்துக்கும் பின்பு ஆஸ்பத்திரிக்கும் எடுத்துச் சென்றார்கள். யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம், கே. தில்லையம்பலம், சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளை ஆகியோரும் சாட்சியமளித்தனர். நீதிபதி விசாரணைக்குப்பின் எதிரிகளைக் குற்றவாளிகளாகக்கண்டு எதிரிகளின் கைவிரல் அடையாளங்களை எடுக்க உத்தரவிட்டு தண்டனை வழக்கை இம்மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## நவக்கிரி, தோப்பு பகுதி மக்களின் பிரயாணக் கஷ்டம்

நவக்கிரி, தோப்பு, பகுதியில் வாழும் பெருந்தொகையான மக்கள் பிரயாண வசதிகள் அற்று கஷ்டப்படுகிறார்கள். இன்றைய தேசிய அரசாங்கம் நாட்டு மக்களுக்கு எதுவித குறைவும் இன்றி தமது ஆட்சியை செலுத்திவரும் நேரத்தில் இக்கிராம மக்கள் மட்டும் கஷ்டப்படுவதை கவனிப்பார் கிடையாதா?

இவ்விரு கிராமங்களும் இருபெரும் கிராமசபைக்குள் அடங்கியனவாய் இருக்கின்றன. அத்துடன் இக்கிராமங்களில் 5,000 க்கு அதிகமான மக்கள் பஸ் போக்குவரத்து இன்றி (அச்சுவேலி - நிலாவரை றோட்டு: தோப்பு, நவக்கிரியை ஊடறுத்துச்செல்லுகின்றது) தினமும் பஸ் சேவை இன்றி தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த றோட்டில் பஸ் ஓடுவதற்குத் தேவையான காரணங்கள்:

(1) இப்பகுதியில் வதியும் மக்களில் பெரும்பான்மையோர் விவசாயிகள். அவர்கள் தமது விளைபொருட்களைச்சுமந்து சென்றுசந்தையில் விற்பனைசெய்கிறார்கள். இவ்விரு கிராமத்திலும் சந்தைகளில்லை. அச்சுவேலியில்தான் சந்தையுண்டு. அத்துடன் தமது அத்தியாவசியமான பொருட்கள்கூட பிறஇடங்களிலே வாங்க வேண்டியதாய் இருக்கிறது.

(2) இங்கு இரு கனிஷ்ட பாடசாலைகளே உண்டு. மேல்வகுப்புப்படிக்கும் 300க்கு அதிகமான மாணவர்கள் தினம் தோறும் நடந்து கல்லூரிக்குச் செல்லுகின்றனர். அதில் பெரும்பான்மையானோர் பெண்பிள்ளைகளே.

கனிஷ்ட பாடசாலையில் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் கூட நடந்துதான் பாடசாலைக்கு வருகிறார்கள்,

(3) இக்கிராமத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள்பெரும்பாலானோர் தங்கள் அலுவலகங்களுக்கு பல மைல்கள் நடந்துசென்றே பஸ் ஏறுகிறார்கள். இவர்களில் இ. போ. ச. வில் வேலை செய்பவர்களும் கூட இருக்கிறார்கள்.

(4) சரித்திரப் புகழ் பெற்ற கிணறு ஒன்றும் இருக்கிறது. இப்பகுதியில் பஸ் ஓடினால் பிறஇடங்களில் இருப்பவர்கள் வந்து பார்க்கக்கூடியதாய் இருக்கும்.

இதைப்பற்றி ஏற்கனவே நாங்கள் கோப்பாய் பா. உறுப்பினர்க்கும், இ. போ. ச. மனேஜருக்கும் அறிவித்திருந்தும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்காததால்மீண்டும்கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

இ. கனகசபை,
ஆ. தாமோதரம்,
பெ. தம்பித்துரை.

தோப்பு, நவக்கிரி.

### பண்டத்தரிப்புச் சந்தி

குளங்கள், வயல் நிலங்களிற்தான் காணப்படும் என்று எண்ணியிருந்த மக்களுக்கு, அவை நாற்சந்தியிலும் காணப்படலாம் என்று புரிய வைப்பது பண்டத்தரிப்புச் சந்தியாகும்.

சுமார் மூன்று அடி ஆழமான பாரிய கிடங்குகள் இச்சந்தியின் போக்குவரத்தையே ஸ்தம்பிதம் செய்துவிட்டன. கடந்த சனிக்கிழமை கிடங்கு ஒன்றில் ஆழந்தெரியாமல் கால் விட்ட நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் மயிரிழை பத்துக் குறிபடுமுறையில் விழுந்தெழும்பினார்.

கடந்தவருடம் இக்கிடங்குகளை நிரவ எண்ணி 'லொரி லொரி'யாக கற்களைப் பறித்த பொதுவேலைப்பகுதியினர் இதோடு இரவாக அக்கற்களை அகற்றிச் சென்றுவிட்டனர். இதுபற்றி கிராமசபையோ மற்றும் மேலிடமோ எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இனியாவது இச்சந்தியில் காணப்படும் அவமானச் சின்னத்தைப் போக்க பொதுவேலைப்பகுதி முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

தி. வ. அம்பரத்தினம்
பண்டத்தரிப்பு.

### பரீட்சைகள்

பண்டத்தரிப்பு, திங்.

மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் நெசவுசாலைகளுக்குரிய பயிற்சியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று நடைபெற்றன. பெண்களே அதிகமாகப் பங்குகொண்டனர், குடும்ப நிலையை அடிப்படையாகக் கொண்டே கேள்விகள் கேட்கப்பட்டன. இளவாலைப்பகுதியில் முள்ளானையில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையத்திற்கான நேர்முகப்பரீட்சை 13-ந்திகதி நடைபெறும்.

---


# நவராத்திரி

| | |
|---|---|
| நவராத்திரி பூஜாரம்பம் | 14-10-66 வெள்ளிக்கிழமை |
| சரஸ்வதி பூஜை | 22-10-66 சனிக்கிழமை |
| விஜயதசமி | 23-10-66 ஞாயிற்றுக்கிழமை |

## நவராத்திரி மலர்

'ஈழநாடு' அளிக்கும் இலவச வெளியீடு 13-10-66-ல் வெளிவரும் போயா மலருடன் இணைக்கப்படவிருக்கும் இவ்விசேஷ மலரினைச் சிறந்த அறிஞர்களின் கட்டுரைகளும்கவிதைகளும் அழகுபடுத்துகின்றன.

ஏஜண்டுகள் தங்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்க.

மனேஜர்,
விநியோகப்பகுதி,
ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. எண். 49,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொம்மைத்' திருமணம் வேண்டாம்!

— செல்வி கோ. சிவஞானவதி —

முற்றும் மலரா அழகிய முகையொன்றினை அது மலர வேண்டிய பருவம் அடையுமுன் இயற்கைக்கு மாறாகப் பிரித்துக் குலைத்து மலர் வடிவில் கொண்டுவர முயன்றாலும் அதன் இதழ்களின் அழகுத் தன்மையும், ஏன் மலரின் அமைப்பே கெட்டுவிடுவதில்லையா? அதன் பட்டுக்கு நிகரானமென்னுடலே கசங்கிச் சீர் கெட்டுவிடுவதில்லையா? இளவயதில் திருமணம் செய்துகொள்வதும் அதுபோன்றுதான். இளவயதில் மணப்பக்குவமடையாத ஆண் பெண்ணின் விளையாட்டுத்தனமான சுதந்திர உணர்ச்சிகளை உதிரப்பண்ணி அவர்களைக் குடும்பச்சிறையுள் திருமணத்தால் கட்டுப்படுத்துவது நல்லதல்ல.

பெண் பருவமடைந்ததும் அவள் உலகத்தை—அதன் முக்கியத்துவத்தை மெல்ல மெல்லப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறாள். ஆணும் குறிப்பிட்ட வயதில் இதே மாதிரிஉணர்கின்றான் ஆனால் அவர்களின் உள்ளங்கள் வளர்ந்து முற்றாத முளைப் பயிரின் நிலையிலேயே இருக்கின்றன. வாழ்க்கையின் உண்மைக் குறிக்கோளை, அதைப் பிறரின் பரிகசிப்புக்கும், நையாண்டிக்கும் உவமையாக்காமல் திறம்பட நடத்தும் திறமை அவர்களிடம் போகப் போகத்தான் புரிய ஆரம்பிக்கும். மனம் உண்மையான பக்குவ உணர்வு அடையுமுன் யாவும் குழந்தைகளின் பொம்மை விளையாட்டாகத்தான் அவர்களுக்குத் தோன்றும்.

இளம் வயதில் திருமணம் செய்துகொண்டு இன்னல் படும் குடும்பங்கள் எண்ணிலடங்கா. குழந்தையும் குட்டியுமாக வாழ்வின் எதிர்ப்புகளையும், இன்னல்களையும், உடலைவாட்டும் பிணியினையும் சகித்துக்கொள்ளும் திறனின்றி, கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அதன் பயனாய் மூளுவிடும் ஆத்திரம் குடும்பத்தின் அமைதியைக் குலைத்து வேடிக்கை செய்வதை எல்லோரும் அறிவர் ஏன் இந்தப் பரிதாபம்! வாழ்க்கையைப்புரிந்து உணர்ந்துவிட்டபின் திருமணத்தை ஆணுக்கும் பெண்ணுக்கும் நடத்தினால் என்ன? திருமணம் புரியும் தம்பதிகள் தான் வாழ்க்கை அனுபவிக்கப்போகும் புதியவர்கள் என்பதை உணரவேண்டும்.

இளம் உள்ளங்களில் இதயத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும் சமயம் தான் திருமணத்திற்கு ஏற்ற சமயம். வீட்டில் பெற்றோர் ஒருவருக்கொருவர் சமாளிக்க முடியாத துயரங்களுக்கிடையே தத்தளிக்கும் போது, ''இனி நாம் எப்படி வாழப்போகின்றோம். எனக்குத் திறமையில்லையே! துணிவுமில்லையே'' என இளம் உள்ளம் சஞ்சலப்படும். ஆனால் மெல்ல மெல்ல வாழ்க்கையின் உட்பொருளைப் புரியும் காலம் வரும் போது என்றுமில்லாத துணிவும், தன்னம்பிக்கையும், திறமையும் தலைதூக்கி நிற்கும். அதுவே திருமணத்திற்கேற்ற பருவம்.

''கைப்பிடித்த கணவனை மனங்கோணாமல் நடத்த எனக்குச் சக்தியுண்டா?

''கணவனின் வருவாய்க்கேற்பச் செலவு செய்து வாழ்வின் பொருளாதாரப் பிரச்சினையை நீக்கும் திறமை என்னிடம் உண்டா?''

''குழந்தைகளைப் பொறுத்தமட்டில் அவர்களின் ஒவ்வொரு அவசியத் தேவையையும் பூர்த்திசெய்து சமுதாயத்தின் முன்னோடிகளாகத் திகழவைக்கும் வல்லமை உண்டா?''

இவ்வாறு எண்ணற்ற கேள்விகள் பெண்ணின் இதயத்தைக்குடைய ஆரம்பிப்பது போலவே ஆண் மனத்திலும் தோன்றும். எல்லாவற்றையும் சமாளிக்கும் திறமையும் பொறுப்புணர்ச்சியும் கைவந்தால் ஒழிய இளமைத் திருமணம் இனிப்பின்றி கசக்கத்தான் செய்யும். இளமைத் திருமணம் பொம்மைக் கலியாணத்தை ஒத்தது. சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென எண்ணி உள்ளம் விரும்பும்போது பெற்றோர் தம் பிள்ளைகட்குத் திருமணத்தைச் செய்வதால் இவ்வாழ்வை அனுபவிப்பதற்குப் பதில் அலுத்துக் கொள்ள ஆரம்பிக்கின்றார்கள். பெற்றோர் தம் எண்ணங்கட்கு முதலிடம் அளிப்பதால் ஏற்படும்பலன் இது.

இளம் வயதில் திருமணம் செய்வதால் எத்தனையோ சோதனைகளைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. முக்கியமாக குழந்தைகளின் பிரச்சினையே தலையாயது. இன்னும் குழந்தைகள் கூடிவிட்டாலோ கேட்கவே வேண்டாம்! இதனால் மனம் சலிக்கப் பெறுவதோடு விரைவில் உடல் சக்தியையும் இழந்துவிடுவதால் நோய்க்காளாக வேண்டிய அவல நிலையும் தலைகாட்டுகின்றது.

''ஒவ்வொரு பெண்ணும் கலியாணம் செய்து கொள்வதற்காகவே பிறக்கிறாள் என்று எண்ணுவது சரியன்று. தனி மனிதனுக்குச் சேவை செய்து கொண்டிருப்பதற்குப் பதிலாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பொதுச் சேவைக்கென்றே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கின்ற அநேக பெண்களை நான் உங்களுக்குக் காட்ட முடியும்.'' என்றார் காந்திமகான்.

அவர் கூறுவதுபோல் திருமணம் என்பதே அவசியமானதொன்றல்லவென்றாலும் உலக நடைமுறைக்காக வாழ்க்கையின் உயர் தத்துவத்தை உணர்த்துவதற்காகவே அது ஏற்கப்பட வேண்டியதொன்றாகும்.

''இடி இடித்தாலும் மின்னல்கள் மின்னினாலும் அவற்றையும் பொருட்படுத்தாது சாதகப்பட்சி மேகத்தினின்று இழியும் நீர்த்துளியைத் தான் பருகுமேயொழிய வேறு நீர் நிலைகளைத் தேடிச் செல்லாது. அதே போல் உன் இலட்சியத்திற்கு எவ்வளவு இடுக்கண் நேர்ந்தாலும் அதைவிட்டு விட்டுப் பிற இலட்சியங்களைத் தேடிச் செல்லாதே'' என்றார் விவேகானந்தர். எனவே எதுவரினும் இளவயதுத் திருமணத்தைத் தடுக்கும் இலட்சியத்தில் நாம் பின்வாங்கக்கூடாது.



## மங்கையர் மன்றம்

## வேண்டுமடி பெண்ணே!

- செல்வி ரோஜா சாமுவேல் -

காலையொளி வீசுமுன்கண் விழிக்கவேண்டும்
கடவுளுக்கு மலர்ப்பூஜை செய்யவேண்டும்
வேலைசெல்லும் கணவனுக்காம் சேவைசெய்தே
வீதிவரை சென்றுவழி யனுப்பவேண்டும்
சாலையைப்போல் முற்றமதைப் பெருக்கிவிட்டே
''சட்'' டென்றே கோலமிடத் தெரியவேண்டும்
மாலைவரை வேலையெல்லாந் திட்டமிட்டே
மகிழ்வுடனே நாளதனைத் தொடங்கவேண்டும்

★

அடுக்களையை அழுக்கின்றி வைக்கவேண்டும்
அறுசுவை போடமுதெல்லாம் சமைக்கவேண்டும்
விருப்புடனே விருந்தினர்க்குப் படைக்கவேண்டும்
வேலையாளை வெறுப்பின்றி நடத்தவேண்டும்
எடுப்பின்றி அலங்காரஞ் செய்யவேண்டும்
எந்நாளும் சிக்கனமாய் வாழவேண்டும்
துடுக்குடனே எதிர்த்துமொழி பேசிடாத
தூய்மையுடை பெண்ணாகத் துலங்கவேண்டும்!

## அறிஞர் அறிந்தவை

– இ. பேர்ணட் –

'அடக்கம், உண்மை, கற்பு இம்மூன்றும் பெண்ணைப் பாதுகாக்கும் தேவதைகள்,'

—ஹால்டன்.

ஃ ஃ ஃ

பெண்கள் வளரும் குழவிகள்,

—செஸ்ரர்பீல்ட்.

ஃ ஃ ஃ

மீனை விரும்பாத பூனையிருந்தால் பொன்னை விரும்பாத பெண்ணும் உண்டு.

—கிரே.

ஃ ஃ ஃ

பெண்களுக்கு ஆண்களின் புகழைவிடச் சிறந்த செல்வம் எதுவுமில்லை.

—தாகூர்.

ஃ ஃ ஃ

கணவனையே கண்கண்ட தெய்வமாக வணங்குகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும்.

—வள்ளுவர்.

ஃ ஃ ஃ

உலகில் உன்னதமான பொருள் பரிபூரணமடைந்த பெண்ணேயாவாள்.

—லவல்.

ஃ ஃ ஃ

துன்பத்தைத் தருகிறவர்களும் பெண்கள் தான் அதைத் தீர்ப்பவர்களும் அவர்கள் தான்.

—ஷெல்லி

ஃ ஃ ஃ

அன்பிற்காக வாழ்பவரார்? அன்பில் ஆவியும் போக்கத்துணிபவர் ஆர்? இன்ப உரைகள் தருபவர் ஆர்? வீட்டை இன்னகையால் ஒளிசெய்பவரார்? பெண்கள் தான்.

—[illegible]

ஃ ஃ ஃ

அழகான பெண் கண்களுக்கு விருந்து; குணமான பெண் மனதிற்கு விருந்து.

—நெப்போலியன்.

ஃ ஃ ஃ

[illegible]தாயகர் பட்சமடி அது எனக்கு ஆயிரம் லட்சமடி.

—வேதநாயகம்பிள்ளை.

## பின்போடாதீர்

செல்வி வே. ஜெயலட்சுமி

உடையில் ஒரு சிறிய கிழிசல் இருந்தால், அதைத் தைப்பதற்கு மிகவும் தாமதம் செய்கிறோம். ஆனால் அதே கிழிசல் ஆணியொன்றில் மாட்டி பெரிதாகக் கிழிந்துவிட்டால், நாம் உடனே அதைத் தைத்துவிடுகிறோம். வீட்டின் முன்பக்கத்தில் அல்லது பூந்தோட்டங்களில் வளரும் சிறிய புல் பூண்டுகளைப் பிடுங்காமல் விட்டு அது வளர்ந்தபின் என்றாவது ஒருநாள் வேலைக்கு சம்பளக்காரன் ஒருவனை நியமித்தோ அல்லது நாமாகவே அப்புல் பூண்டுகளை அகற்றிவிடுகிறோம் நாம் இப்படியான சிலவேலைகளை உடனுக்குடன் கவனியாது விட்டால் வேலைகள் ஒழிவதும் இல்லை. நேரமும்வீணாகின்றன உடனுக்குடன் வேலைகளைச் செய்ய பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

நல்ல பழக்கவழக்கங்களை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கும், சுத்தமாக இருக்கவும், யாவற்றையும் சுத்தமாக வைத்திருக்கவும் சரியானவற்றையும் பிழையானவற்றையும் பேதப்படுத்தி அவற்றின் நன்மை தீமைகளைப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்கு நமக்கு ஒருபோதும் முடிவது இல்லை. ஆனால் பிற்காலத்தில் பிள்ளைகள் வழிதவறி பிழையான பாதையில் போய்விடும் பொழுது அவர்கள் சிறுவர்களாக இருந்தகாலத்தில் நமது கடமையில் நமது கடமையில் நாம் இவ்வாறு தவறியதைக்குறித்து வருந்துகின்றோம்.

இளமையிலேயேசுறுசுறுப்புடனும் சுத்தத்துடனும் யாவும் செய்வதற்கு நமது குழந்தைகளுக்கு நாம் கற்றுக்கொடுக்கவேண்டுவது மிகவும் முக்கியமானது. உடைந்துபோன பொத்தானையோ, சட்டையிலிருக்கும் கிழிசலையோ உடனுக்குடன் தைத்துச், சிறுசிறு காரியங்களில் அதைக் கவனிக்கும்படி குழந்தைகளைப் பயிற்றுவிக்கவேண்டும். ''தொட்டில்பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்ற பழமொழிக்கேற்ப சிறுபிராயத்திலேபழகும் பழக்க வழக்கங்கள் வளரவளரவளர்ந்துஇருந்து கொண்டே வருகின்றன. பிள்ளைகள் இத்தகைய நற்பழக்கவழக்கமுடையவர்களாக இருப்பது பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கும். பெரும் பொறுப்புடைய தாய்மார்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். நாம் எக்காரியங்களையும் பின்போடாமல் உடனுக்குடன் செய்துவந்தால் நம்முடைய வேலைகள் ஒழிந்துவிடுகின்றன. குறைந்த நேரத்தில் மிகுதியான வேலைகளைச் செய்துவிடுகிறோம்.

## டாக்ஸியில் தலை அலங்காரம்

மங்கையர்க்குமட்டுமன்றி ஆடவர்க்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. ஐயோ இந்த பெண்களோடு புறப்பட்டால் குறித்த நேரத்திற்கு ஒரிடத்தை போய்ச் சேர முடியாதே. கண்ணாடியுடனேயே காலத்தைக் கழிக்கிறார்களே என்று அலுத்துக் கொள்ளும் ஆடவர்க்கும் ஓர் ஆறுதல்.

டாக்ஸியிலேயே தலை அலங்காரம் செய்து கொள்ளக் கூடியதாக ஒரு சேவையை பாரிஸில் உள்ள ஒரு ஸ்தாபனம் செய்துவருகிறது.

## சமையல் கவனிப்பு

பக்குவம்செய்த பாத்திரங்களில் இடும் கரண்டிகளை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்ற வேண்டாம். பதார்த்தம் கெட ஏதுவாகும்.

தரையின்மேல் ரசம், குழம்பு பரிமாறிய கரண்டிகளை வைத்துவிட்டு, அப்படியே அதைமறுபடியும் உபயோகித்தால் தரையிலிருக்கும் தூசியும் அழுக்கும் ஒட்டிக் கொண்டுவிடும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் கொண்டு உபயோகித்த கரண்டிகளைப்போட்டு விடவும்.

ஒருநபர் சாப்பிட வருவதற்கு நேரமானால் சிறிதளவு தணல்போட்டு பதார்த்தங்களைத் தண்ணீரில் வைத்திருந்தால் சூடு ஆறிப்போகாமலிருக்கும். குக்கரானால் அப்படியே மூடி வைத்துவிடலாம்.

காலத்திற்கேற்ப முதல் நாள் செய்ததை மறுநாள் சாப்பிட்டால் உடம்பிற்கு ஒத்துக்கொள்வதில்லை. திட்டமாகக்கூடியவரையில் மீதமாகாமல் சமைப்பது சிக்கனம்.

## கண்டிப்பு களிப்பை அளிக்கும்

குழந்தைகளுக்காகப்பெற்றோர்கள் பலவசதிகளை இழக்கவேண்டியிருப்பதால் குழந்தைகளிடமிருந்தும் பெற்றோர்கள் பதிலுக்குச் சில மடமைகளை எதிர்பார்ப்பதில் வியப்பில்லை. அவர்கள் எதிர்பார்ப்பது வெறும் நன்றியுரையல்ல; ஆனால், குழந்தைகள், பெற்றோர்களின் கருத்துக்கும்தராதரத்துக்கும் தகுந்தவாறு அன்பு, மரியாதை, கீழ்ப்படிதல், முதலிய நல்ல பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுதாகும். அப்படிப்பட்ட குழந்தைகள் தான்வளர்ந்த பின்னர், மற்றவர்களுடன், மகிழ்ச்சியுடன் ஒத்து வாழ்பவர்களாக இருக்க முடியும்.

குழந்தை ததங்களை வெறுத்துவிடக்கூடாது எனக்கருதித்தவறு செய்யும் குழந்தையை அவ்வப்போது கண்டிக்கத்தயங்கினால், குழந்தையின் செய்கை நாளுக்கு நாள் பெற்றோருக்குச் சினமூட்டுவதாகத்தான் அமையும். மேலும் அத்தகைய பெற்றோரின் குழந்தைக்குத் திருட்டுத்தனம், பிடிவாதம், தாழ்ந்த மனப்பான்மை முதலிய தீயபழக்கங்களும் ஏற்படும். ஆகையால், குழந்தையின் தவறான செய்கைகளையும், பிடிவாதத்தையும் ஆரம்பத்திலிருந்தேகண்டித்து வளர்த்தால், நாளடைவில் குழந்தை மிகவும்திருந்திவிடும். குழந்தைகள் ஒழுங்காக நடப்பதன் மூலம்தான் பெற்றோர் மகிழ்ச்சிபெற முடியும். குழந்தைகளும் மகிழ்ச்சி அடையமுடியும்.

-டாக்டர் செஞ்சமின் ஸ்போக்-

## கை வைத்தியம்

### கண்நோய்

நந்தியாவட்டைப் பூவை கசக்கிச் சாறு எடுத்து இரண்டொரு சொட்டுகள் கண்ணில் விடக் குணமாகும்.

### வயிற்றுக்கடுப்பு

தொட்டால் சிணுங்கிச் செடியின் இலையை அம்மியில் நன்றாக அரைத்துச் சுண்டைக் காயளவு தயிரில் குழப்பிக் கொடுக்கவும். வெந்தயத்துடன் தயிரைக் கலந்து கொடுப்பதும் வயிற்றுக் கடுப்பைப் போக்கும்.

### உடம்பு வலி

நொச்சி இலைபோட்டுக் காய்ச்சிய நீரைச் சூடாக விட்டுக் கொண்டு குளித்தால் வாதத்தின் காரணமாக ஏற்படும் உடம்புவலி நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான மோதலின் பின்னர் தோல்வி

யாழ்ப்பாணம், செவ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 1-ம் பிரிவுப் போட்டியில் கடுமையான மோதலின் பின்னர் சென் ஜோன்ஸ் யூனியன் கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டியில் ஆரம்பத்தில் இருந்து முடியும் வரையும் இரு சாராருமே திறமையாக விளையாடி நல்ல தொரு ரசிப்பான உதைபந்தாட்டப் போட்டியை ரசிகர்களுக்களித்தனர்.

இடைவேளைக்கு முன் கோல்கள் போடுவதில் அதிக சிரத்தையுடன் போட்டியிட்ட சென். ஜோன்ஸ் வீரர் விஞயகமூர்த்தி அடுத்தடுத்து இரு கோல்களை மின்னல் வேகத்தில் உதைத்துத் தள்ளினர். யூனியன் கோஷ்டியும் ஒரு கோலை அழகாகப் போட்டது. இடைவேளையின் போது யூனியன் ஒரு கோல் போட்டிருக்கத் தக்கதாக சென். ஜோன்ஸ் இரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் இரு கோஷ்டியினரும் கடுமையாக மோதினர். போட்டியும் விறுவிறுப்பாகவும் காரமாகவும் காணப்பட்டது. இரு சாராரும் விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்டமையால் இடைவேளைக்குப் பின்னர் ஒருவருமே கோல்கள் போடவில்லை. இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 2—1 கோல்களால் தெல்லிப்பழை யூனியனைத் தோற்கடித்தது. இப்போட்டி யாவும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

# அதிகமான கோல்கள்போட்டு அமோக வெற்றி

யாழ்ப்பாணம், செவ். யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். இந்துக்கல்லூரிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 2ம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அதிகமான கோல்கள் போட்டு அமோக வெற்றியீட்டியது.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் போட்டி விறுவிறுப்பாகக் காணப்படவில்லை. இடைவேளையின் போது எதிர்க்கோஷ்டியினர் ஒரு கோலும் போடாத வகையில் யாழ். இந்து 7 கோல்கள் போட்டிருந்தது. இடைவேளைக்குப் பின்னும் யாழ். இந்து சூட்டோடு சூடாகக் கோல்கள் போட்டுக்கொண்டே இருந்தது. இக்கோல்கள் போடும் கட்டங்களே ரசிகர்களுக்கு ரசிப்பைக் கொடுத்தது. 15-0 கோல்களால் அமோக வெற்றியீட்டினர். இப்போட்டி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.




# சேவைநலம் பாராட்டு

திருநெல்வேலி, ஞாயிறு கிராமசேவையாளராகக் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு. பி. கபிரியேற்பிள்ளையின் சேவைநலம் பாராட்டுமுகமாக அண்மையில் ஆனைக்கோட்டை கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் தலைவர் திரு. ச. துரையப்பா தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. பி. கபிரியேற்பிள்ளையின் சேவைகளைப் பாராட்டி அவர் பேசும்பொது 'இக் கிராமமுன்னேற்றச் சங்கம் மறைந்துவிடும் நிலையில் இருந்தபோது கிராமசேவையாளராக நியமனம்பெற்று வந்த இவர் முதல் வேலையாக பலசமூக மக்களையும் தலைவர்களையும் சந்தித்து பல புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து புனருத்தாரணம் செய்தார்.

உபதலைவர்கள் திரு க. ஆறுமுகம் திரு. வை. பரமநாதன் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர். திரு. பி. கபிரியேற்பிள்ளை தமக்களித்த பிரியாவிடைக்கு நன்றிதெரிவித்தார்.

# இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அரைமணி நேரத்தால், 14 வயதான ஒரு இளம்பெண் மரணமானர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இப்பெண்மணியின் தயாருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்ட ஒரு வாரத்தின்பின் இச்சம்பவம் நடந்தது.

ஆவரங்காலைச் சேர்ந்த வைரவப்பிள்ளையின் மகள் மல்லிகா தேவியின் மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை செய்தார்.

இப்பெண்ணின் தாயாரான நல்லம்மாவிற்குசத்திர சிகிச்சை நடைபெற்ற ஒரு வார காலத்தின்பின், பெண் சுகமில்லாமல் கோப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் மரணவிசாரணையின்போது கூறப்பட்டது

டாக்டர் திருமதி இராமலிங்கம் சாட்சியமளித்தார். இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணி நடத்தவிருக்கும் சத்தியாக்கிரகஇயக்கத்துக்கு பல்வேறு பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை இனத்தவர்களின் ஆலோசனைகளையும் கோரி துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தை வலுப்படுத்தும் ஆலோசனை நல்கும்படியும் ஆண் பெண் இருபாலாரும் ஒழுங்குகளைக் கவனித்துச் செயலாற்றவும் வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலிக்கு உபபொலிஸ்

பருத்தித்துறை, திங். வெகுவிரைவில் அச்சுவேலிக்கு உப பொலிஸ் நிலையம் ஒன்று அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கை மிகவும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வேலைகள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ... பிள்ளையின் முயற்சியால் நடைபெறுகிறது.

# திருநெல்வேலியில் முத்தமிழ்விழா நாளை ஆரம்பம்

திருநெல்வேலி, செவ். திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தினரின் நான்காவது முத்தமிழ் விழா நாளையதினம் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து இரண்டு தினங்கள் இயக்கத் திறந்தவெளியரங்கில் நடக்கவிருக்கும் இவ்விழாவுக்கு இரண்டு தினங்களும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. சபாரட்ணமும், யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. புல்லைநாயகமும் தலைமைதாங்குவர்.

நாதஸ்வரக்கச்சேரி, இன்னிசை, வில்லுப்பாட்டு, கலாக்ஷேத்திர மாணவிகளின் நடனம், மிருதங்கக்கச்சேரி, வீணைகானம், சொற்போர், இலக்கியக்கதம்பம், நாடகங்கள், மெல்லிசை ஆகிய நிகழ்ச்சிகள் விசேஷமாக இடம்பெறவுள்ளன.

விழாவில் திரு. பி. எஸ். பிச்சையப்பாவுக்கு ''நாதஸ்வரகலாசோதி'' என்றபட்டமும், திரு கணேசசுந்தரத்திற்கு 'வில்லிசைக் கலாநிதி' என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கின்றார்கள்.

இரண்டாம் நாள்விழாவில் இந்து. இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதத்தவர்களும் ஊர்வலமாக விழாவுக்கு அழைத்து வரப்பட இருக்கிறார்கள்.

# ஆதவன் இளைஞர் முன்னேற்றக் கழகம்

உடுப்பிட்டி, திங்கள் கரணவாய் தெற்கு ''ஆதவன் இளைஞர் முன்னேற்றக் கழக'' புதுநிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. கே. இரத்தின சபாபதி, செயலாளர்: திரு. எஸ். பாலசுப்பிரமணியம், பொருளாளர்: திரு வே. வில்வநாயகம், உப செயலாளர்: திரு. எஸ். குலசேகரம் ஆகியோர் நிர்வாகசபையினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# கடமையைச் செய்தால் மதிப்பை பெறலாம்

## விளையாட்டு விழாவில் வேம்படி அதிபர்

அச்சுவேலி, திங்கள் ''மாணவர்கள் எப்போதும் தமது கடமைகளைச் செவ்வனே செய்துவர வேண்டும். கடமைகளைச் செவ்வனே செய்துவரின் வாழ்க்கையில் முற்போக்கடைவதுடன் நல்ல மதிப்பையும் பெற்றுவிடலாம்.''

இவ்வாறு அச்சுவேலி சென். திரேசா பாடசாலையில் நடைபெற்ற இல்லங்களின் விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி எம். தம்மையா குறிப்பிட்டார். பாடசாலைத் தலைமை ஆசிரியர் தமது உரையில் குறிப்பிட்டதாவது: எமது பாடசாலையில் உடற்பயிற்சியாசிரியர் இல்லாதிருந்தும் இத்துறையில் யாம் சற்றும் இளைத்தவர்களல்லர் என்பதையிட்டு மகிழ்ச்சி கொள்ளுகிறேன்.

1-ம் இடம் லில்லி இல்லம் 116 புள்ளி, 2-ம் இடம் றோஸ் இல்லம் 144 புள்ளி, 3-ம் இடம் டெய்சி இல்லம் 109 புள்ளி

சுத்தம் 1-ம் இடம் டெய்சி இல்லம், ஆங்கிலம் 1-ம் இடம் டெய்சி இல்லம், வரைதல் 1-ம் இடம் லில்லி இல்லம், பொதறிவு 1-ம் இடம் டெய்சி இல்லம், வலைப்பந்தாட்டம் 1-ம் இடம் லில்லி இல்லம், அணி நடை 1-ம் இடம் லில்லி இல்லம், விநோத உடை 1-ம் இடம் டெய்சி இல்லம்.

# உற்சாகமாக நடைபெற்ற உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான 2-ம், 3-ம் உதைபந்தாட்டப்போட்டிகள் யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது. இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் விறுவிறுப்பாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது இரு சாராரும் மிகவும் உற்சாகமாகப் பலமாக மோதினர். சென். ஜோன்ஸ் முன்னணி வீரரான வாமசிவம் மின்னல் வேகத்தில் ஒரு கோல போட்டார். யூனியன்கல்லூரியும் ஒரு கோல் போட்டது. இடைவேளையின்போது இருசாராரும் ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தனர். இடைவேளையின் பின்னர் போட்டியின் தரம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. யூனியன் கல்லூரிக்கு எதிர்பாராத விதமாக ஒரு 'பெனல்டி' கிடைக்கவே அதை அவர்கள் பயன்படுத்தி மேலும் ஒரு கோல் பெற்றனர். சென். ஜோன்ஸ் முன்னணி வீரர்களான வாமசிவம், சிவபாலன் ஆகியோர் மேலும் ஆளுக்கொரு கோல் போட்டு தமது கோல் எண்ணிக்கையை 3 ஆக உயர்த்தினர். இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 3-2 கோல்களால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைத் தோற்கடித்தது.

# நியாய விலைக்கடை புதிய கட்டிடம்

மன்னார், திங். பொதுமக்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு இரண்டு மாடிக்கட்டிட நியாய விலைக் கடையொன்றை மன்னார் பட்டின சபை 50 ஆயிரம் ரூபா செலவில் கட்டுவதற்கு பூர்வாங்க ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

பட்டினசபையின் சார்பில் ஆரம்பித்து நடாத்தப்படவிருக்கும் இக்கடையில் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களும், ... யூர், உள்ளூர் உற்பத்திப் பொருட்களும் முக்கியமாக விற்பனை செய்யப்படுவதுடன், ஏழைமக்களிடம் கொள்ளை லாபமடிக்கும் கள்ளச் சந்தை வியாபாரிகளின் எதுக்கல்களும் பூரணமாக ஒழிக்கப்படும் எனத்தெரிய வருகிறது.

# எதிரி விடுதலை

மாவிட்டபுரம், திங். தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த சாதாரணம் வைரமுத்து என்பவர் தனது தம்பியாகிய வேலாயுதபிள்ளையை சென்ற வருடம் நவம்பர் மாதம் 9-ம்தேதி இரும்புக்கம்பியால் தாக்கிப்படுகாயம் ஏற்படுத்தியதாக சுன்னாகம்பொலிசாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி.எஸ். நித்தியானந்தா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

உடுப்பிட்டி, திங்கள் வடமராட்சிப்பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால் தாழ்ந்த பிரதேசங்கள், வயல்கள் யாவும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. வயலிலே விதைக்கப்பட்ட விதை நெல் யாவும் வெள்ளத்தில் சென்றபடியால் விவசாயிகள் மிகவும் கஷ்டமடைந்துள்ளனர். கம்பர்மலை, கரணவாய், கரவெட்டி, துன்னாலை, கப்பூது முதலிய இடங்களில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. புகையிலை நாற்றுக்கள் இம்மழையினால் அழிவுற்றதாக விவசாயி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். உடுப்பிட்டிப் பகுதியில் கடந்த சில தினங்களாக மழை தொடர்ந்து பெய்துவருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. ஜி.க்கு மக்கள் வழங்கிய தங்கப்பவுண் மாலை

## தொழிற்சாலை அமைக்க மூலதனமாக பயன்படும்

யாழ்ப்பாணம், திங்கள் கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து திரும்பிய யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட 65 தங்கப்பவுண் மாலையை ஆரம்ப மூலதனமாகக் கொண்டு விரைவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

இத் தொழிற்சாலைக்காக பலாலி விமான நிலையத்திற் கருகாமையில் ஐந்து ஏக்கர் காணி வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்தகவலை தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

திரு. பொன்னம்பலத்திற்குத் தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட 65 தங்கப்பவுண் மாலை அப்படியே இருக்கின்றது. இதனை ஆரம்ப மூலதனமாகக்கொண்டு ஒரு தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறது. பலாலியில் இதற்கான காணி ஒன்று வாங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன.

இத்தொழிற்சாலையைத் திடீரெனக் கட்டி முடித்துவிட முடியாது. அதற்கான யந்திரங்கள் வரவழைக்கப் படவேண்டும். இத்தொழிற்சாலைக்கான காணி வாங்கப் பட்டதும், கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும். அநேகமாக அடுத்த வருடத்தில் இதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்படலாம். இத்தொழிற்சாலை நிறுவப் பட்டபின், வாலிபர்களுக்கு வேலை வழங்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அத்திட்டத்தின்படி வேலைவழங்கப் படும்.

இத்தொழிற்சாலை அநேகமாக ஒரு பெரும் மின்தறி நெசவுசாலையாக இருக்குமென்று அறியப்படுகிறது.

# பெண்கடத்து வழக்கில் எதிரிக்கு 'வாரண்ட்'

யாழ்ப்பாணம், செவ். நல்லூர் பெண்கடத்து வழக்கில் எதிரியொருவருக்கு வாரண்ட் பிறப்பிக்கப் பட்டது. இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. சி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நேற்றைய விசாரணையின் போது மூன்றாவது எதிரி கோர்ட்டிற்கு வராததால் மாஜிஸ்திரேட் அவர்மீது வாரண்ட் பிறப்பித்தார்.

இவ்வழக்கில் நல்லூர் ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த 17 வயது இளம் பெண் மேரி திரேசாவை துரைசிங்கம், திருநாவுக்கரசு, நவரத்தினம், தங்கராசா ஆகியோர் கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் புறக்டர்கள் எஸ். கனகரத்தினம் வி. நடராசா ஆகியோர் ஆஜரானார்கள். வழக்காளி தரப்பில் பொலிஸாருடன் புறக்டர்கள் ஏ. அல்ரனி, ஆர். விஸ்வநாதன் ஆகியோர் ஆஜரானார்கள்.

மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 17ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## மீண்டும் ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், திங்கள் தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டம் மீண்டும் பின் போடப்பட்டுள்ளது. இக்கூட்டம் அக்டோபர் மாதம் 27-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். 28-ம் தேதி செயற்குழுக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

பொதுச் சபைக்கூட்டத்தை இம்மாதம் 18-ம் தேதியாழ்ப்பாணத்தில்நடத்துவதென முதலில் தீர்மானிக்கப் பட்டது. பின்னர் இம்மாதம் 19-ம் தேதி திருகோணமலையில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டிருந்தது.


## 'ஈழநாடு' தினக்குறிப்பு 1967

'ஈழநாடு' 1967-ம் ஆண்டுக்குரிய தினக் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளவிரும்பும் விற்பனையாளர்கள் 'ஈழநாடு' காரியாலயத்திற்கு தங்களுக்குத் தேவையான தொகையைக் குறித்து 18-10-66-ம் திகதிக்குமுன் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தினக்குறிப்புப் பிரதியின் விலை ரூபா 1-50

விற்பனையாளர்களுக்கு 15 வீதம் கழிவு உண்டு.

அதிபர்

'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

1824


## பஸ்சேவைரத்து

### பொதுமக்கள் புகார்

உடுவில், திங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பிரவுண் வீதியூடாகக்கோண்டாவில் வரைக்கும் கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவந்த பஸ் போக்குவரத்துத் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. இச்சேவையினால் பொதுமக்கள் பெரிதும் பயனடைந்துவந்தனர். இப்பொழுது இச்சேவை நிறுத்தப்பட்டதனால் வழக்கமாக இச்சேவையை நம்பிய பொதுமக்களும் மற்றும் அலுவலக ஊழியர்களும் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

குறிப்பாக திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப்பாடசாலை ஆகியவற்றிற்குச் செல்லும் மாணவர்கள் இப்பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இச்சேவையை மீண்டும் ஆரம்பித்து நடத்துமாறு மாணவர்களும், பொதுமக்களும் இ. போ. ச. அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

## நீதவானிடம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, செவ். தொடம்பே முதலாளிஎன்பவரும், திலகரத்ன என்ற ராணுவவீரரும், ரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயக் கட்டடத்திலிருந்து விழுந்து மாண்டது சம்பந்தமாக பொலிஸார் நடத்தியுள்ள புலன்விசாரணைகளில் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களை கோட்டை நீதவான் முன்னிலையில் அட்டோர்னி ஜெனரல் விரைவில் சமர்ப்பிப்பார் என்று அறியப்படுகின்றது.

இந்த இருவரும் முதலில் பொலிஸ் கட்டடத்திலிருந்து குதித்து தற்கொலை புரிந்ததாக தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. பின்னர் தொடம்பே முதலாளியின் சகோதரர் செய்துகொண்ட விண்ணப்பத்தின் பேரில் நடைபெற்ற விசாரணை அவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாக தீர்ப்பளிக்கப்பட்டது அதைத்தொடர்ந்து பொலிசார் நடத்தியுள்ள புதிய புலன்விசாரணைகளின் முடிவுகள் இப்போது கோட்டை நீதவான் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இந்தத் தகவல்களின் அடிப்படையில் நடைபெறும் விசாரணைகளின் பின் கொலையா அல்லது தற்கொலையா என்பதை நீதவான் தீர்மானிப்பார்.

## கொழும்பு இலக்கிய வட்டம்

கொழும்பு, செவ்வாய் கொழும்பு இலக்கிய வட்டத்தின் செயற்குழுக் கூட்டம் விவேகானந்த சபை மண்டபத்தில் தலைவர் மஹாகவி தலைமையில் நடைபெற்றது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

சமீபத்தில் இவ்வாண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற ஐந்து எழுத்தாளர்களையும் பாராட்டும் தீர்மானம் ஒன்றும், மறைந்த தமிழறிஞர் வித்துவான் க. வேந்தனாருக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானம் ஒன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன

## நமசிவாயம் காலமானர்

யாழ்ப்பாணம். செவ் முன்னைநாள் உதவிரப்பர் கட்டுப்பாட்டதிகாரி திரு. சி. டி. நமசிவாயம் நேற்றுக்காலை கொழும்பில் தமது 66-வது வயதில் காலமானார். இவர் பல சமூக சேவை ... புரிந்து வந்தார்.

# திருட்டு வழக்கில் எதிரி குறுக்குவிசாரணை நடத்தினர்

மாவிட்டபுரம், திங்கள் மல்லாகம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் திருட்டு வழக்கொன்றில் எதிரி, வழக்கறிஞர் இல்லாமலே சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்தார்.

உரும்பராயைச் சேர்ந்த கிட்டிணன் தர்மகுலசிங்கம் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த சின்னப்பிள்ளை முத்துத்தம்பி என்பவருக்குச் சொந்தமானதும் 4,350 ரூபாய் பெறுமதியுமான நகைகள், உடுப்புக்களை வீடு உடைத்து திருடியதாக் சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிசார் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை நடத்தினர். எதிரிக்காக வழக்கறிஞர் யாரும் ஆஜராகவில்லை.

முத்துத்தம்பி சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

சம்பவதினம் இரவு 10 மணிக்கு வீட்டைப் பூட்டிவிட்டுப் படுத்துவிட்டேன். சுவாமி அறைக்குள் இருந்த டிரங்பெட்டியில் நகைகளும் உடுப்புக்களும் இருந்தன. சூட்கேசில் சில உடுப்புகள் இருந்தன.

காலை 5 மணிக்கு சுவாமி அறைக்குப் போனேன்; மூன்று ஓடுகள் கழட்டப்பட்டிருந்தன, சூட்கேசும், டிரங்பெட்டியும் திறந்து இருந்தன. டிரங்கில் இருந்த நல்ல உடுப்புகளையும் நகைகளையும் காணவில்லை. சூட்கேசில் இருந்த நல்ல உடுப்புக்களையும் காணவில்லை. பழைய சேலைகள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன. நான் கூறினேன். மருமகன் நாகலிங்கம் நடராசா வந்தார். அவருக்கு நடந்த சம்பவத்தைச் சொன்னேன். பொலிசுக்கு அறிவிக்கும்படியும் சொன்னேன். பொலிசார் என்னிடம் வாய்முறைப்பாடு எடுத்தார்கள்.

சுவாமி அறைக்குப் பொலிஸ் காவல்போட்டார்கள். பொலிசில் இருந்து விரல் அடையாள நிபுணர் வந்து வீட்டிலிருந்து அடையாளங்களை எடுத்தார். எதிரி கூப்பிடு தொலைவில் இருப்பவர். ஒரு நாளும்எனதுவீட்டுக்குஅவர் வந்தது இல்லை.

இதன்பின் சப். இன்ஸ்பெக்டர் ராசநாயகம் சாட்சியமளித்தார். எதிரிஅவரை குறுக்கு விசாரணை செய்த போது சப். இன்ஸ்பெக்டர் சொன்னதாவது:-

எதிரியை நான் கைது செய்யவில்லை என்பதனைமறுக்கிறேன். பூபாலசிங்கம் தான் கைதுசெய்தார் என்பதனையும் மறுக்கிறேன். பொலிஸ் நிலையத்தில் எதிரியை உதைக்கவில்லை. ஊசியால் குத்தப் போகவில்லை. தொண்டையைத் திருகவில்லை.

விரல் அடையாளம் எடுப்பதற்கு சாஜன்ட், சாராயப் போத்தல் கொடுத்து பிடிக்கச் செய்துபின் வாங்கியதை நான்காணவில்லை.

சார்ஜன்ட் கணபதிப்பிள்ளையும் சாட்சியமளித்தா . நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## யாழ். இந்து மாணவனுக்கு முதற் பரிசு

யாழ்ப்பாணம், செவ். பாடசாலை விஞ்ஞானக் கழகங்களின் சம்மேளனம் நடாத்திய விஞ்ஞான ஆராய்ச்சிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் கே. தயாநிதிக்கு ''யாழ்ப்பாணத்து வண்ணாத்திப் பூச்சிகள்'' என்னும் கட்டுரைக்கு முதற் பரிசான ரூபா 100 வழங்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளாக அவர் சேகரித்து வந்த வண்ணாத்திப் பூச்சிகளை காட்சிக்கு வைத்து ஒரு கட்டுரையையும் அவர் பம்பலப்பிட்டி கன்னியாஸ்திரி மடத்தில் நடைபெற்ற விஞ்ஞானப் போட்டியில் விளக்கினார்.

இரண்டாவது பரிசு (ரூபா 50) கண்டி ட்றினிற்றி கல்லூரி மாணவன் பி. சமரவீர எழுதிய ''ஈழத்துக் குளப் பறவைகள்'' என்னும் கட்டுரைக்கும், மூன்றாவது பரிசு (ரூபா 25) பம்பலப்பிட்டி கன்னியாஸ்திரி மட மாணவி நிர்மாலினி தம்பு எழுதிய ''சில இலங்கை சஞ்சிகைகளின் 'பழக்க வழக்கங்கள்'' என்னும் கட்டுரைக்கும் வழங்கப்பட்டன.

## குழந்தைகள் வாரம்

கொழும்பு, திங்கள் சுயநலத்துக்காக குழந்தைகள் மோசமான முறையில் நடாத்தப்படுவதையும், பிஞ்சு உள்ளங்களைக் கஷ்டப்படுத்தக்கூடாதென்பதையும் நினைவுகூரும்முகமாக இம்மாதம் 22-ந் தேதியிலிருந்து 28-ந் தேதிவரை குழந்தைகள்வாரம் கொண்டாடப்பட இருக்கின்றது.

கொழும்பு ரோயல்கல்லூரி மண்டபத்தில் மகாதேசாதிபதி தலைமையில் 22-ந் தேதி குழந்தைகள் விழா ஒன்று நடைபெறும். பிரதம நீதியரசர் திரு. சி. எஸ். பெர்னாண்டோ விசேஷ சொற்பொழிவாளராகக் கலந்து கொள்வார்.

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் இம்மாதம் 25ந் திகதி குழந்தைகளுக்கான பொருட் காட்சியை சமூக சேவை மந்திரி திரு. அசோக கருணரத்தின ஆரம்பித்து வைப்பார்.

பொருட்காட்சியைப் பிரதமர் டட்லி சேனநாயக்கா திறந்துவைப்பார். 27ந் தேதிவரை பொருட்காட்சி நடைபெறும்.

## அலறும் வ தார்!

மாவிட்டபுரம், திங். வழலாயைச் சேர்ந்த ஒரு யுவதி பாடசாலையிலிருந்து வீடு திரும்பி வருகையில் அவரை மறித்துப் பலாத்காரம் பிரயோகிக்க ஒரு வாலிபர் முயன்றாராம். அயலவர்கள் ஓடிவரவே வாலிபர் ஓடிவிட்டாராம்.

காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் இது பற்றிப் புகார் செய்யப்பட்ட போது சந்தேக நபரும் அங்கேயே இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டு பொலிசார் எதுவித சிரமமுமின்றி அவரை லொக்கப்'பில் போட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்துக்கு புதிய வாடிவீடு

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் கடற்கரைப் பக்கமாக மாநகர சபை மண்டபத்திற்கு பின்புறம் உள்ள சேமக்காலையில் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய வாடிவீடு ஒன்று அமைப்பதற்கு தற்பொழுது அரசாங்க கடன் உதவி கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

வாடி வீடு யாழ்ப்பாணக் கலாசாரத்துக்கமைய அலங்கார வேலைப்பாடுடையதாகவும் 20 அறைகளைக் கொண்டதாகவும் கூட்ட அறை, சம்பாஷணை அறை, மண்டபம் ஆகிய வசதிகள் கொண்டதாகவும் அமையும் என்றும் தெரிய வருகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org